பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில்
முதலாம் தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது.

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | மாசி 12 | செவ்வாய்க்கிழமை | (24-02-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 67

# கூட்டணித் தலைவர் சங்கரி

# சுயேட்சையாகப் போட்டி



## வேட்புமனு நேற்றுத் தாக்கல்

(அலுவலக நிருபர்)

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி நேற்று யாழ்.மாவட்டத்தில் சுயேட்சைக்குழுவில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்.**

ஏப்ரல் மாதம் 2ம் திகதி நடைபெறவுள்ள 13வது பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைச் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் சுயேட்சைக் குழுவாகப் போட்டியிடும் வேட்பாளர்களின் நியமனப் பத்திரங்களை அக் குழுவின் தலைவர் ஆனந்தசங்கரி நேற்றுக் காலை 10.00மணிக்கு யாழ். செயலகத்தில் தெரிவத்தாட்சி உத்தியோகத்தரிடம் தாக்கல் செய்துள்ளார்.

பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் தனது வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் சகிதம் யாழ்.செயலகத்திற்கு சென்ற சங்கரி வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரியை முதன்மை வேட்பாளராகக் கொண்ட பட்டியலில் எஸ்.முத்துலிங்கம், (முன்னாள் உடுவில் கிராமசபைத் தலைவர்), எஸ்.அரவிந்தன் (முன்னாள் யாழ்.மாநகரசபை உறுப்பினர்), எஸ்.பத்மநாதன், அ.ஜோர்ஜ், கு.இராசரத்தினம், சி.பொன்னுத்துரை, ந.கிருஷ்ணராசா, பெ.சூரியமூர்த்தி, இ.சாந்தசொரூபன், இ.சங்கையா, செல்லன் கந்தையன்(முன்னாள் யாழ். மாநகரசபை மேயர்) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (ம-19,4)

## ஆதரவாளர்கள் புடைசூழ

# பொங்குதமிழ் கோஷத்தோடு

# கூட்டமைப்பு வேட்புமனு தாக்கல்

(அலுவலகச் செய்தியாளர் குழு)

பெருந்திரளான ஆதரவாளர்கள் புடைசூழ தடல்புடலான ஏற்பாடுகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று யாழ்.செயலகத்தில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தது.

கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் மாவை. சேனாதிராசா வேட்புமனுக்களை முற்பகல் வேளை யாழ்.செயலக தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியிடம் கையளித்தார்.

இதற்கு முன்னதாக கூட்டமைப்பு வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் காலை கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் ஒன்று கூடி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து செல்வா சதுக்கத்தில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் நினை (12ம் பக்கம் பார்க்க)



தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர்கள் நேற்று யாழ் செயலகத்தில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தபோது எடுக்கப்பட்ட படங்களை 2ம் பக்கத்தில் காணலாம்.

## வேட்புமனுத் தாக்கல்

# இன்று நண்பகலுடன் முடிபு

(கொழும்பு)

13வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்கள் இன்று நண்பகல் 12.00மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் நண்பகல் 12.00மணிமுதல் பிற்பகல் 1.30மணி வரை ஆட்சேபனைகளைத் தெரிவிக்கலாம் என்றும் உதவித் தேர்தல் ஆணையாளர் ரி.சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள 22மாவட்டங்களிலும் நேற்று வரை பிரதான அரசியல் கட்சிகள் உட்பட 19 அரசியல் கட்சிகளும் 75 சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

இவற்றில் ஐக்கிய தேசியக் கட்சி 12 மாவட்டங்களிலும், ஐக் (12ம் பக்கம் பார்க்க)

# பருத்தித்துறை மீனவர் மீது இந்திய மீனவர் தாக்குதல்

## மூவர் படுகாயம்

(திருநெல்வேலி)

பருத்தித்துறைக் கடலில் இந்திய மீனவர்கள் மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் மூன்று மீனவர்கள் படுகாயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 10.30மணியளவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் வியாபாரி மூலை முதலாம் கட்டையைச் சேர்ந்தவர்களான செல்லத்துரை செல்வராஜா (வயது40), இவரது மகன் செல்வராஜா செல்வமோகன் (வயது 16), கனகரத்தினம் சிவானந்தன்(வயது31) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது;

நேற்றுக் கடற்தொழிலுக்கு சென்ற பருத்தித்துறை மீனவர்களை இரண்டு படகுகளில் வந்த 20 இந் (12ம் பக்கம் பார்க்க)

# ஷெல் வெடித்ததில் குடும்பஸ்தர் பலி

## நெடுங்குளத்தில் சம்பவம்

(கொழும்புத்துறை)

வெடிக்காத ஷெல்லை வாளால் அறுத்தபோது அது வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உடல் சிதறிப் பலியானார்.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் நெடுங்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் றக்கா வீதியை வதிவிடமாகக் கொண்ட இரண்டு பிள்ளைகளின் தந்தையான வெற்றிவேல்நாதன் (வயது 35) என்பவரே மரணமானார்.

மீன் பிடிப்பதற்குப் பயன்படுத்தும் எறிவெடி தயாரிப்பதற்காக ஷெல்லினுள் இருக்கும் மருந்து பயன்படுத்தப்படுவதாகவும் இதனால் ஷெல்லினுள் இருக்கும் மருந்தை எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோதே அது வெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-51)

# யாழ்.பொது நூலகம்

# நேற்று முதல் பாவனைக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொது நூலகம் நேற்றுக் காலை வைபவரீதியான ஏற்பாடுகள் எதுவும் இன்றி அமைதியான முறையில் திறந்து விடப்பட்டது.

யாழ்.பொதுநூலகத்தை திறக்குமாறு பல்வேறு (12ம் பக்கம் பார்க்க)



# வன்னியில் கூட்டமைப்பு-புளொட்

# நேற்று வேட்புமனுத் தாக்கல்

(வவுனியா)

வன்னி மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட நேற்று 7அரசியல் கட்சிகளும் இரண்டு சுயேட்சைக் குழுக்களும் தங்களின் வேட்பு மனுக்களை வன்னி மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி கே.கணேசிடம் கையளித்தனர்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வேட்பு மனுக்கள் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (தமிழரசுக் கட்சி) புதிய இடதுசாரி முன்னணி, மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி(புளொட்) ஜாதிக ஹெல உறுமய, (12ம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர்கள் நேற்று வேட்பு மனு தாக்கல் செய்த பின்னர் யாழ் செயலகத்திற்கு முன்பாக ஆதரவாளர்களுடன்...











படங்கள்: பவன், ஐங்கரன்.

# 19 வயது இலங்கை அணியை மே.இ.தீவுகள் அணி வென்றது

பங்களாதேஷில் நடைபெற்று வரும் 19வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டியில் நேற்றைய தினம் நடைபெற்ற சுப்பலீக் போட்டியொன்றில் மேற்கிநதிய தீவுகள் அணி இலங்கையணியை 19ஓட்டங்களால் தோற்கடித்துள்ளது. நேற்றயை போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 7விக்கெற் இழப்பிற்கு 200ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்து ஆடிய இலங்கையணி 49வது ஓவரில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 181ஓட்டங்களை மட்டுமே பெற்றது. 16 அணிகள் கலந்துகொள்ளும் இச் சுற்றுப் போட்டியில் 8அணிகள் ஏற்கனவே 2ம் சுற்றுக்குத் தகுதி பெற்றுக்கொண்டன. அவுஸ்திரேலியா உட்பட 8 அணிகள் அடுதத சுற்றுக்குச் செல்ல தகுதி பெறவில்லை.

(யே-121)



ஹைதராபாத்தில் சனிக்கிழமை நடைபெற்ற சர்வதேச ஓபன் டென்னிஸ் போட்டியில் இரட்டையர் பிரிவில் முதலிடம் பெற்று கைப்பற்றிய கோப்பையுடன் இந்தியாவின் சானியா மிர்ஸா (வலது) தென் ஆபிரிக்காவின் லிசல் ஹூபர் ஜோடி. டபிள்யூடிஏ எனப்படும் உலக மகளிர் டென்னிஸ் பட்டத்தை சானியா வெல்வது இதுவே முதல் முறை.

# விளையாட்டு



டெல்லியில் நடைபெற்ற கிரிக்கெற் மற்றும் சினிமா நட்சத்திரங்கள் கலந்துகொண்ட கிரிக்கெற் போட்டியில் இந்திய அணியின் முன்னாள் வீரர் அஜய் ஜடேஜாவும் நடிகை மந்ரா பேடியும் மைதானத்தில்.

# மெய்வல்லுநர் போட்டிகள்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகாவித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பி.ப.2மணிக்கு அதிபர் எஸ்.அரியகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

* * *

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாநத இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 2.00மணிக்கு அதிபர் எஸ்.நவநீதிமணி தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-35)

* * *

(இருபாலை)

இருபாலை சி.சி.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று 1.30மணிக்கு பாடசாலை அருகிலுள்ள பாரதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி க.சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இவ் விளையாட்டு நிகழ்வில், வைத்திய கலாநிதி டாக்டர் வை.தியாகராஜா பிரதம விருந்தினராகவும் ஏ.எம்.ரி.ரான்ஸ்போட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஈ.நிமலன், பாரதி சனசமூக நிலையத் தலைவா் க.சேனாதிராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், வலி.கிழக்கு அரசியல்துறைப பொறுப்பாளர் து.கிரி கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-84)

* * *

(அளவெட்டி)

அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பி.ப.2.00மணிக்கு பாடசாலை அதிபர் அ.இரங்கநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.


இந் நிகழ்வில், வலி-வடக்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் பி.இராஜகோபாலன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (தி-83)

* * *

யா/இளையதம்பி இந்து வித்தியாலய மெய்வலலுநர் போட்டிக்கான சான்றிதழ்களும் வெற்றிக் கேடயஙகளும் வழங்கும் வைபவம் அதிபர் மு.செல்லையா தலைமையில் பாடசாலையில் இன்று செவ்வாய்ககிழமை காலை 8.30மணிக்கு நடைபெறும். இதில் பிரதம அதிதியாக யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.



நோர்விச் யூனியன் திறந்த தடகளப் போட்டிகளில் ஆண்களுக்கான 5,000மீற்றர் ஓட்டப் போட்டியில் எத்தியோப்பியாவின் கெனசியா புதிய சாதனை ஏற்படுத்தினார்.



ஹைதராபாத்தில் சனிக்கிழமை நிறைவுற்ற ஹைதராபாத் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டியில், ஒற்றையர் பிரிவில் கைப்பற்றிய கோப்பையுடன் 31வயதாகும் அவுஸ்திரேலிய வீராங்கனை நிகோல் பிராட், இறுதி ஆட்டத்தில் இவர் 7-6 (3), 6-1 என்ற நேர் செட்களில் ரஷ்ய வீராங்கனை கிரிலென்கோவைத் தோற்கடித்தார்.

# கார், மோட்டார் சைக்கிள் போட்டிகளின் முடிவுகள்

மோட்டார் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் பந்தயம் நேற்று கட்டுக்கொத்த விமானப் படை ஓடுபாதையில் நடைபெற்றது. இந்தப் பந்தயத்தை கிளாடா எனப்படும் இலங்கை மோட்டார் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்தது.

2004 கிளாடா வெற்றிக் கிண்ணம் எனப் பெயரிடப்பட்டிருந்த இந்தப் பந்தயத்தில் மோட்டார் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் பிரிவுகள் இரண்டின் கீழும் 26நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இதில் PB 125 பிரிவில் மோட்டாா சைக்கிள் போட்டியில் செலாக் பீரிஸ் வெற்றி பெற்றார்.

PB250 விருந்து PB400 வரையான பிரிவில் மோட்டார் சைக்கிள் போட்டியை சுவர்ண விஜய சிங்ஹ வெற்றியீட்டினார். PB1500 பிரிவு மோட்டார் கார் ஓட்டப்பந்தயத்தில் முதலிடத்தை தயார் சுவைப்பெற்றார்.

2004கிளாடா பந்தயத்தின் போமியூலா மோட்டார் கார் ஓட்டப்பந்தயமானது அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் நிகழ்ச்சியாக அமைந்திருந்தது.

(யே-121)

# மாவனின் முன்மாதிரியை நடுவர் பாராட்டினார்

அவுஸ்திரேலிய கிரிக்கெற் வீரர் அன்ரு சைமன்ஸை மீணடும் ஆடுகளத்துக்குள் அனுமதித்த விடயத்தில் இலங்கை கிரிக்கெற் அணித்தலைவர் மாவன் அத்தபத்துவின் முன்மாதிரிகையை போட்டி மத்தியஸ்தா மைக் புறொக்ர் பாராட்டியுள்ளார். அன்ரு சைமன்ஸ் 10ஓட்டஙகளைப் பெற்றிருந்த போது குமார்தர்மசேனாவின் பந்து வீச்சில் LBW முறையில் ஆட்டமிழந்ததாக நடுவர் பீற்றர் மனுவல் தீர்ப்பு வழங்கினார். எனினும் தாம் வழங்கிய தீர்ப்பு தவறானது என துரிதமாக சுதாகரித்துக்கொண்ட நடுவர் பீற்றர் மனுவல் சக நடுவருடன் கலந்துரையாடியதன் பின்னர் மீண்டும் திருப்பி அழைக்கத் தீர்மானித்தார்.



இதற்காக இலங்கையணித தலைவர் மாவனை அத்தப்பத்துவிடம் கேட்டபோது அவர் அதனைஏறறுக் கொணடார். இநதச் செயலைப் பாராட்டியுள்ள போட்டி மத்தியஸ்தா் மைக் புறொக்ரர் மிகச் சிறப்பான முறையில் சம்பவம் கையாளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் இதற்காக மாவன் அத்தப்பத்துவையும் அவரது அணியினரையும் பாராட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

(யே-121)

# அபாரமாக ஆரம்பித்த பங்களாதேஷ் 2 ஓவர்களில் 5விக்கெற்றுக்களை இழந்தது

சிம்பாப்வேக்கு எதிரான முதலாவது டெஸ்தொடரில் விளையாடிவரும் பங்களாதேஷ் அணியினர் தமது முதலாது இனனிங்ஸில் 331ஓடடங்களை எடுத்து சிம்பாப்வே அணிக்கு மிக அச்சுறுத்தலான நிலையிலிருந்தனர். முன்னதாக சிம்பாப்வே அணியினர் தமது முதல் இன்னிங்ஸில் 441ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 8விக்கெற் இழப்பிற்கு 242 ஓட்டங்களையும் பெற்ற நிலையில ஆட்டத்தை நிறுத்திக் கொண்டனர்.



ஹற்றிக் சாதனை புரிந்த சிம்பாப்வேயின் பிளிக்நோட்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணியினர் நான்காவது ஓவரில் ஹொண்டோவின் பந்துவீச்சில் சஹாரியர் ஹுசெய்னும், ஹபிபுல் பஷாரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். தொடர்ந்து 5வது ஓவர் பந்துவீசிய அன்ரு பிளிக்நொட் ஹட்றிக் முறையில் அடுத்தடுத்து மூன்று விக்கெற்றுக்களை வீழ்த்தினார். ஹன்னா சர்க்கார், மொஹமட் அஸ்ரபுல், முஸ்பிகர் ர.ஃமான் ஆகியோரே இவ்வாறு ஆட்டமிழந்தனர். இரண்டாவது இனனிங்ஸில் நான்காவது நாள் ஆட்டத்தின் போது 242ஓட்டங்களுக்கு 8விககெற்றுகளை இழந்த நிலையில 353ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்கை நோக்கி பங்களாதேஷ் அணியினர் ஆடிக்கொண்டிருந்தனர்.



நிதானமாக செஞ்சரி அடித்த சிம்பாப்வே வீரர் ரெய்பூ.

முன்னதாக சிம்பாப்வே அணியின் ரெய்பூ மிக அவதானமாக விளையாடி நேர்த்தியான 100ஓட்டங்களைப் பெறறதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(யே)

# சர்வதேச விளையாட்டு வீரராக ராகுல் ட்ராவிட் தெரிவானார்

சோனி தொலைக்காட்சியின் 2003ஆம் ஆண்டுக்கான சர்வதேச விளையாட்டு வீரராக இந்தியா வின் ராகுல் ட்ராவிட் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் வீரர் வசிம் அக்ரம், இந்திய நட்சத்திர டென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ் ஆகியோரைப் பின்னுக்குத் தள்ளி இவ் விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் ட்ராவிட்.

லண்டனில் சனிக்கிழமை இரவு நடைபெற்ற பிரமாண்டமான விழாவில், ராகுல் ட்ராவிட் சார்பில் இங்கிலாந்து கிரிக்கெற் அணியின் முன்னாள் கப்டன் மைக்காட்டிங் இவ் விருதைப் பெற் றார்

நிகழ்ச்சியில் அவர் கூறும் போது, கிரிக்கெற் உலகில் பெயரும் புகழும் பெற்றுத் திகழும் வீரர்களில் ஒருவராகத் திகழும் ட்ராவிட், இவ் விருதுக்குத் தகுதியானவரே எனக் குறிப்பிட்டுள்ளார்.

அணியின் அரண் என பெரும்பாலும் அழைக்கப்படும் ட்ராவிட் 2003-ம் ஆண்டில் குறிப்பிடும்படியான பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

அடிலெய்டில் சமீபத்தில் நடைபெற்ற 2-வது டெஸ்டில் இவர் குவித்த 242 ரன்கள் அவுஸ்திரேலியாவைத் தோற்கடிக்க முக்கிய காரணமானது குறிப்பிடத்தக்கது. பாகஸ்தான் முன்னாள் ஆல்ரவுண்டர் ஆசிஃப் இக்பால் வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெற்றார்.

9 வயது கிரிக்கெற் வீரர் சாஹில் அகர்வாலுக்கு சிறந்த இளம் வீரர் விருதும் 11வயது டென்னிஸ் விளையாட்டாளர் ஹூம்சா மஹ்மூத்துக்கு ஆண்டின் சிறந்த ஜூனியர் விருதும் வழங்கப்பட்டது.

(யே-121)

# போர் நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு பேராபத்து

## நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் அபாயச் சங்கு

(கொழும்பு)

**தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் முறுகல் நிலை காரணமாக அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு பேராபத்து ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.**

**நாட்டில் நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்துவதற்குரிய முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிய ஓர் பொறுப்பான தலைமைப்பீடம் தென்னிலங்கை அரசியலில் உருவாக வேண்டியது மிகவும் அவசியமானது என நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தெரிவித்துள்ளார்.**

ரணில் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இரு வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில், தற்போதைய அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக ஏ.பி.சி.செய்தி நிறுவனத்திற்கு நேற்று முன்தினம் வழங்கிய விசேட பேட்டியிலேயே விடார் கெல்கீசன் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் இது விடயம் தொடர்பாக கருத்துக் கூறுகையில்,

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் ஏறபட்ட அரசியல் முறுகல் நிலையை அடுத்தே திடீரென பாராளுமன்றம் கலைக்கப்பட்டதுடன், எதிர்வரும் ஏப்ரலில் பொதுத்தேர்தல் ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இவற்றினால் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமின்மை காரணமாக சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்குத் தாமதம் ஏற்பட்டு வரும் அதேவேளை, செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு பேராபத்து ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

அத்துடன், தேக்கமடைந்துள்ள சமாதான முயற்சிகள் தற்போதைய அரசியல் குழப்ப நிலைகளினால் மேலும் பலவீனம்அடையும் சாத்தியம் உள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கையினை நல்லமுறையில் நடைமுறைப்படுத்துவதற்காக கடந்த இரண்டு ஆண்டுகளில் நோர்வே பல சவால்களை எதிர்கொண்டது.

இருப்பினும் இந்தப் பணியில் இருந்து நோர்வே ஒருபோதும் ஒதுங்கிவிடாது எனக் குறிப்பிட்டார். (உ-18)

## யுத்த அனர்த்தங்களினால் முல்லை மீனவர்களுக்கு 12 கோடி ரூபா இழப்பு

(மருதங்கேணி)

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களின் 12கோடி ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள அழிக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் 350இற்கும் அதிகமான கண்ணாடி இழைப் படகுகள் மற்றும் மீன்பிடி வலைகள், வெளியிணைப்பு இயந்திரங்கள் என்பன அழிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, முல்லைத்தீவு கடற்பரப்பிலும் தரையிலுமாக இராணுவ நடவடிக்கையால் 272 மீனவர்கள் உயிரிழந்துள்ளனர். 92 மீனவர்கள் அங்கவீனர்களாக உள்ளனர். அத்துடன், 60 இற்கு அதிகமான கடற்றொழிலாளர்களின் பிள்ளைகள் தாய்தந்தையரை இழந்துள்ளனர்: 117 பெண்கள் கணவனை இழந்துள்ளனர்.

இதேவேளை, முல்லைத்தீவு நகரை அண்டிய பகுதிகளில் இராணுவத்தளம் அமைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் பெரும்பாலான மீன்பிடி வள்ளங்கள், படகுகள், மீன் பிடி உபகரணங்கள் வெளியிணைப்பு இயந்திரங்கள் தீயிட்டு அழிக்கப்பட்டதாகவும் பல உபகரணங்கள் கொள்ளையடிக்கப் பட்டதாகவும அப்பகுதி மீனவ சங்கங்கள் தெரிவித்துள்ளன. (உ-35)

# சர்வாதிகார ஆட்சியை நோக்கி நாடு நகர்த்தப்பட்டு வருகிறது

## விக்கிரமபாகு கருணாரட்ண கவலை

(கொழும்பு)

தேச பகதி கொண்டவர்களெனத தம்மைக் கூறிக்கொள்ளும் சில அரசியல்வாதிகள் பௌத்த சிங்கள இனத்தின் பேரால் நாட்டில் ஓர் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்துவதற்கு முயன்று கொண்டிருக்கிறார்கள் என புதிய இடதுசாரி முன்னணியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண கவலை தெரிவித்துள்ளார்.

சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பு விஹாரமாதேவி பூங்காவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புரிந்துணர்வு உடன்படிக்கையின் 2ஆம் ஆண்டு பூர்த்தியையொட்டி ஒழுங்குசெய்யப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே விக்கிரமபாகு கருணாரட்ண இதனைத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

எதிர்வரும் ஏப்பிரல் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் நாட்டு மக்கள் அனைவரும் தமது நிலைப்பாடுகள் குறித்து விரிவாக யோசித்து ஆராய்ந்து அறிந்த பின்பே தமது வாக்குகளை வழங்க வேண்டும்.

நிரந்தர சமாதானம், மற்றும் ஜனநாயகம் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்ட ஓர் சிறந்த அரசியல் தலைமைப் பீடத்தினைத் தெரிவுசெய்யும் பொறுப்பு மக்களுக்கு இருப்பதால் தெளிந்த சிந்தையுடன் தமது வாக்குகளைச் செலுத்தவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

அந் நிகழ்வில் கலந்துகொண்ட சக வாழ்வுக்கான அமைப்பின் தலைவர் கலாநிதி குமார் ரூபசிங்க உரையாற்றுகையில்,

திடீர் பாராளுமன்றக் கலைப்பை அடுத்து, பொதுத் தேர்தலொன்று நடாத்தப்படவுள்ளமை குறித்து பல்வேறு சந்தேகங்கள் தற்போது எழுந்துள்ளன.

ரணில் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்தும் பேணுவதற்கு தற்போது பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதுடன், எவ்வாறு சமாதான முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பது என்பதுதான் தற்போது நாம் முகம் கொடுக்கும் பாரிய சவாலாகும்.

தமிழ்மக்கள் இன்னுமோர் 50 ஆண்டு காலங்கள் சமாதானத்திற்காகக் காததிருக்க முடியாது. நாட்டில் நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஆளும் வர்க்கமும் அதன் உறுப்பினர்களும் முனைப்புடன் செயற்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார். (உ-18)

## அரசியல் கட்சிகளின் ஒற்றுமையை வலியுறுத்துகிறார் அமெ.தூதுவர்

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையுடன் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டியது மிகவும் முக்கியமான தொன்றாகும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரே லுன்ஸ்டெட் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாகக் கருதது வெளியிட்ட ஜெப்ரே லுன்ஸ்டெட்,

எதிர்வரும் தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகள் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் விசுவாசத்துடன் பற்றுறுதியுடனும் இருக்க வேண்டும்.

ரணில் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்நதும் அமுலில் இருப்பதற்கு அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்படுவதுடன், நாடடில் நிரந்தர சமாதானமொன்றை ஏற்படுத்துவதற்குரிய அனைத்து வழிமுறைகளும் அனுசரித்துச் செயற்பட வேண்டியது மிக இன்றியமையாத தொன்றாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். (உ-18)

## தபால்மூல வாக்களிப்பு கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ்ஸநாயக்க இது குறித்து விடுத்துள்ள அறிக்கையில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான கால எல்லை நேற்றுடன் முடிவடையவிருந்த போதிலும் எதிர்வரும் மார்ச் மாதம் 7ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

அதேவேளை, இந்தக்கால எல்லை 7 ஆம் திகதிக்குப்பின் மேலும் நீடிக்கப்படமாட்டாது எனவும் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-60,8)

# தமிழீழத் தேசிய விளையாட்டு விழா நான்காம்நாள் போட்டி முடிவுகள்

தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவின் நான்காம் நாள் விளையாட்டுக்கள் நேற்றுக்காலை 8 மணியளவில் ஆரம்பமாகின. பெண்களுககான கரப்பந்தாட்ட அரையிறுதிப் போட்டிகளில் யாழ்ப்பாண அணியை எதிர்த்தாடிய திருகோணமலை அணியினர் 25:22, 25:16, 26:24 என்ற நேர் செற்களில் யாழ். அணியைத் தோற்கடித்து இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகினர். அதேவேளை அம்பாறை அணியை எதிர்கொண்ட மன்னார் அணியினர் 25:18, 25:21, 25:16 எனும் நேர் செறகளில் அம்பாறை அணியைத் தோறகடித்து இறுதிப்போட்டிக்குத் தெரிவாகினர். இப்போட்டிகளுக்கு திருவாளர்கள் செல்வராசா, மனோகரன் ஆகியோர் நடுவர்களாகப் பணியாற்றினர்.

**கபடி**

பெண்களுக்கான கபடிப் போட்டியில் திருமலை அணியை எதிர்த்தாடிய மட்டுநகர் அணி 21:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் திருமலையை வெற்றிகொண்டது. ஆண்களுக்கான கபடிப்போட்டியில் முல்லைத்தீவு அணியை எதிர்த்தாடிய வவுனியா அணியினர் 48:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றனர். அபயசேகர, யஸ்ரின் பெரேரா, விமலசேன, லலிதலியனகே ஆகியோர் இப்போட்டிகளுக்கு நடுவர்களாகக் கடமையாற்றினர். இப்போட்டிகளில் வெற்றியீட்டிய அணியினர் அரையிறுதிக்குத் தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது.

**யாழ்.அணி வெற்றி**

இதேவேளை நேற்றுப் பிற்பகல் நடந்த கிரிக்கெற் போட்டி ஒன்றில் யாழ்ப்பாண அணி கிளிநொச்சி அணியை 7 விக்கெற்றுக்களால் தோற்கடித்து அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. ஸ்கோர் விபரம் வருமாறு:

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 29.1 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 107 ஓட்டங்களை எடுத்தனர். இதில் ராஜ்குமார் 27 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் றொபேசன் 3 விக்கெட்டுக்களையும் ஜனார்த்தனன், கிருஸ்ணராஜ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். அணியினர் 22.1 ஓவரில் வெற்றி இலக்கை (108) எட்டி 7 விக்கெற்றுக்களால் வெற்றி பெற்றனர்.

இதில் சிவராசா 25 ஓட்டங்களையும் கௌரிபாலன் ஆட்டமிழக்காமல் 46 ஓட்டங்களையும் பெற்றனர்.

ராஜ்குமார் 2 விக்கெற்றுக்களை கைப்பற்றினார். இப்போட்டிகளுக்கு கிருபாகரன், முருகவேல் ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினர். (யே-68)

# சிறுநீரகக் கோளாறு சரிசெய்யக்கூடியதே

## மருத்துவ விளக்கம்

**டாக்டர் சி.கே.எம். சபாபதி**

நம் உடலில் மொத்தம் இரண்டு சிறுநீரகங்கள் உள்ளன. இவைகள முதுகுபுறத்தில் விலா எலும்புகளுக்கு கீழே முதுகெலும்பு தொடரின் இரு புறமும் பக்கத்திற்கும் ஒன்றாக (இடது,வலது) அமைந்துள்ளது. இந்த சிறுநீரகங்கள் அவரை விதை வடிவில் காணப்படும். இவைகள் சுமார் 140-கிராம் எடை கொண்டுள்ளது.

சிறுநீரகத்தை வெளிப்புறம், உட்புறம் என்று இரு பிரிவுகளாக பிரித்துளளார்கள். வெளிப்புறத்தில சிவப்பு நிறமாகக் காணட்டும் பகுதியை கார் டெக்ஸ் (**Cortex**) என்றும் உட்புறம்ாகக் காணப்படும். கலா மங்கிய பகுதிக்கு மெடுலலா (**Medulla**) என்றும் பெயர் சிறுநீரகத்தின் மையப் பகுதியை ஹைலம் (**Hilem**) என்று கூறுவார். இப் பகுதியின் வழியாகத் தான் சிறுநீரகத்திற்கு இரத்த ஓட்டத்தைக் கொடுக்கும். இரத்தக் குழாய்கள், நரப்புகள் மற்றும் சிறுநீரகக்குழல்களும் ஆரம்பிக்கின்றன. மேலும் ஒவ்வொரு சிறுநீரகத்திலும் சுமார் 10-லட்சம் (10,00,000) நெப்ரோன்கள் என்னும் நுண்ணிய வடிகுழல்கள் காணப்படுகின்றன. இந்த நெப்ரோன்கள்தான் சிறுநீரகத்தில் தான் பணிபுரியும் திசுவாகும்.

இருதயத்தில் இருந்து வெளிப்படும மகாதமணியில் இருந்து இரு தமணிகள் பிரிந்து சிறுநீரகங்களுக்கு ஒட்சிசன் கலந்த தூய இரத்தத்தை கொடுக்கின்றது. இவற்றிற்கு சிறுநீரகத் தமணிகள் என்று பெயர்.

இந்த சிறுநீரகத் தமணிகள் சிறு சிறு தமணிகளாகவும், சிறு சிறு நுண்ணிய இரத்தக் குழாய்களாகவும் பிரிந்து நெப்ரோன்களில் உள்ள சில அமைப்புக்களுடன் சேர்ந்து சிறுநீரகத்தில் குளாமி-ருலஸ் **Glomeruls** என்னும் முடிச்சுகளாகின்றன.

இந்த இடத்தில்தான் இரத்தத்தில் உள்ள நீர் மற்றும் திட, திவரப் பொருட்கள் வடிகட்டப்படுகின்றன. இந்த வடிநீர் சிறுநீரகத்தில் உள்ள நெப்ரோன்களில் சுருண்டு, நீண்ட, நுரை குழல்கள் வழியே செல்லும் போது உடலுக் குத் தேவையான நீரும், திட, திரவம் பொருள்களும் மீண்டும் உறிஞ்சப்பட்டு, தேவையற்ற நீரும், ஒரு சில திட, திரவப் பொருட்களும் சிறுநீா குழல் மூலம் வெளியேற்றப்படுகின்றது. இவ்வாறு வெளியேற்றப்பட்ட சிறுநீர், சிறுநீர்ப் பையை வந்தடைந்து. சிறுநீர் புழை மூலம் வெளியேற்றப்படுகின்றது. இவ்வாறு வெளியேறும் கழிவுப்பொருட்களில் யூரியா கிரியேட்டனின் போன்ற இரசாயனப் பொருட்களும் அடங்கும். நம் உடலில் உள்ள் கழிவுகளை எல்லாம் வெளியேற்றி தூய்மையான நிலையில் நம் உடலைப் பாதுகாப்பது இந்த சிறுநீரகம் தான். இந்த சிறுநீரகங்களின் செல்களில் மாற்றங்கள் ஏற்படும் போதும், நோய்கள் அவற்றை பற்றிக் கொள்ளும் போதும் நாம் நமது உயிரை இழக்க நேரிடுகின்றது.

### சிறுநீரகங்களின் பணிகள்

நம் உடலின் நீரின் அளவு, இரத்ததில் உப்பு மற்றும் அமில காரத்தன்மையை ஒரேசீராக வைத்திருக்க உதவுகிறது. இரத்தத்திலுள்ள உப்பு சத்து, சர்க்கரை மற்றும் நாம் உட்கொள்ளும் உணவின் சத்துக்களை வடிகட்டி நமக்கு சக்தியை தருகிறது. தேவையற்றவைகளை வடிகட்டி வெளியேற்றும் வேலையையும் செய்யும். இரத்த அழுத்தம், இரத்த சோகை போன்றவை வராமல் தடுக்கப்படுகின்றன. விற்றமின் டி, உற்பத்திக்கும் சிறு நீரகம் துணை புரிகின்றன. நம் உடலில் உள்ள கழிவுப் பொருட்களான யூரியா, கிரியேட்டினின் தேவைக்கும் அதிகமான நீர், யூரிக அமிலம் மற்றும் தேவைக்கு அதிகமான தாது உபபுகளான சோடியம், பொட்டாசியம், குளோரைட்டு போன்றனவும் வெளியேற்றப்படுகின்றன. உணவு செரிகதலின் கடைசி நிலையில் உண்டாகும் பாஸ்பேட், சல்பேட், ஆக்ஸ்லேட், யூரேட்டஸ் போன்றனவும் சிறுநீர் மூலம் நம் சிறுநீரகங்கள் வெளியேற்றுகின்றன. இவற்றில் யூரியா என்பது நாம் உண்ணும் புரதத்தின் கழிவுப் பொருட்கள் ஆகும். நமது சிறுநீரகம் நல்ல நிலையில் செயல்படுகின்றதா? என்பதை அறிய ஒவ்வொருவரும் இரத்தம் மற்றும் சிறுநீரகப் பரிசோதனை செய்து கொள்வது நல்லது. **Normal-urea level-30 mg/100ml. of blood**-ல் இருக்க வேண்டும்.

மேலும் **Uric acid** 2-3 **mg/100 ml**,**Creatinine** 0.9 **to** 1-5 **mg/100ml**,சோடியம் **Na**-134 **to** 144,பொட்டாசியம் **K**-2.5 **to** 5.0-**mg.**

குளோரைடு-98 **to** 106 ஆக இருக்க வேண்டும். மேற்கூறிய கழிவுப்பொருட்கள், சிறுநீரகங்கள் பழுதடையும் போது இரத்ததில் அதிகமாகின்றன. இதனை செயற்கை முறையில் இரத்த சுத்திகரிப்பு செய்தல் (**Dialys is**) மற்றும் சிறுநீரக மாற்றும் அறுவை சிகிச்சை போன்றவை செய்யும் நிலை ஏற்பட்டு இறுதியில் உயிரிழக்கும் நிலை ஏற்படுகிறது.

**சிறுநீரக செயலிழப்பு ஏற்பட காரணங்கள்:-**

சிறுநீரகங்கள் தாங்கள் செய்யும் பணியில் இருந்து 50 சத்திற்கும் குறையும் போது அவை செயலிழந்தவையாகக் கருதப்படுகின்றது.

1.திடீரென ஏற்படும் தற்காலிக செயலிழப்பு (**Acute Renal Failure**)

2.நாட்பட்ட காரணங்களால் ஏற்படும் நிரந்தர செயலிழப்பு (**Chronic Renai Failure**) என இருவகைகளாகப் பிரிக்கலாம்.

விபத்து, அறுவை சிகிச்சை, மற்றும் குழந்தை பேறு காலத்தில் ஏற்படும் இரத்த இழப்பின் காரணமாக சிறுநீரகங்களுக்கு செல்லும் இரத்தத்தின் அளவு குறைவதால் சிறுநீரகம் செயலிழந்து வருகின்றன.

வயிற்றுப் போக்கு,(**Diarrhoea**) வாந்தி (**Vomiting**) போன்றவற்றால் உடலிலிருந்து அதிக அளவு நீரும், உப்பு, சோடியம் போன்றவை வெளியேறி இரத்த அழுத்தம் குறைகிறது (**Low B.P**) இதனால் சிறுநீரகம் பாதிக்கலாம்.

தீக்காயம் மற்றும் மின்சாரத் தாக்குதல்களினால் இரத்தத்திலுள்ள பிளாஸ்மா அதிகம் வெளியேறுகிறது. இதனாலும் பாதிக்கலாம்.

சிறுநீர் வெளியேறும் சிறுநீர் குழாய் (**Urethra**) அடைப்பு, மற்றும் சிறுநீர்ப்பை(**Bladder**)அடைப்பு போன்றவை சிறுநீரகங்களின் பணிக்கு தடையாக மாறி **Kidney Failure** ஏற்படலாம்.

பாம்பின் விஷம் மற்றும் நுண் கிருமிகளின் நச்சுத்தன்மை போனறவற்றாலும் பாதிப்பு அடையும்.

மற்ற நோய்களுக்காக எடுக்கப்படும் இரசாயன மாத்திரைகளால் பாதிக்கப்படுகின்றன.

சிறுநீர் குழாயில் ஏற்படும் தசை சுருக்கம், கற்கல், கட்டிகள், புற்று நோய் போன்றவற்றாலும் அடைப்பு ஏற்பட்டு சிறுநீரகம் பழுதாகலாம்.

நீரிழிவு நோய்,உயர்இரத்த அழுத்தம் சிறுநீரகக் கற்கள், இரத்த சோகை இரத்தக் குழாய், மூட்டுக்கள், இணைப்பு திசுக்களை பாதிக்கும் இதர நோய்களாலும் நிரந்தர சிறுநீரக செயலிழப்பு ஏற்படுகிறது. எய்ட்ஸ், மஞ்சள் காமாலையின் வைரஸ் பி-கிட்னியை பழுதடைய செய்யும்.

**சிறுநீரக செயல் இழப்பின் அறிகுறிகள்:-**

சிறுநீரக செயல் இழப்பின் காரணங்களுக்கு ஏற்பவும், நோயின் தீவிரத்தைப் பொறுத்தும் அறிகுறிகள் வேறுபடுகின்றன.

இரத்த சோகையினால் வெளிறி போன முகம், சிறுநீரின் அளவு குறைதல் இதனால் உடலில் கை, கால், முகம், வயிறு போன்றவை வீங்கி முற்றிய நிலையில் நுரையீரல், இதயம் போன்ற முக்கிய உறுப்புகளைப் பாதிக்கின்றது. இதனால் மிக குறைந்த இரத்த அழுத்தம், மூச்சிரைத்தல், நெஞ்சுவலி, மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழக்க நேரிடுகிறது.

சிறுநீர் போகும் போது எரிச்சல், கண்ணின் கீழ் வீக்கம், கீழ் முதுகில் வலி, சிறுநீர் கோப்பி கலராக காணப்படுதல், சோம்பல், அசதியாகவும் இருக்கும்.

வெளியேற்றும் சிறுநீர் அளவு குறைவதால் யூரியா, கிரியேட்டினின், பொட்டாசியம், சோடியம போன்றவை இரத்தத்தில் அதிகரித்தல் ஆகியன இருக்கும்.

**தேவையான தெய்வீக மூலிகைகள்:-**

வேப்பிலை, வில்வம், அறுகு, அத்தி, முருங்கை, ஆடாதோடை, கழாநெல்லி, நெல்லி,நாவல்,ஆவாரம்பூ, துளசி, தும்பை போன்ற மூலிகைகள் பறித்து வந்து வெய்யிலில் உலர்த்தி பொடிசெய்து சலித்து பின் சம அளவில் ஒன்றாகக் கலந்து வைத்துக்கொள்ள வேண்டும். பின் இதில் இருந்து இரண்டு டீஸ்பூன் அளவு எடுத்து தண்ணீரில் கலந்து உணவுக்கு ஒருமணி நேரததிற்கு முன்பாக தினமும காலை, மாலை உட்கொள்ள வேண்டும்.

மேற்கூறிய மூலிகைகளின் கசப்பு துவர்ப்பு சுவைகளினால் சிறுநீரகமானது முதலில் எந்த விதமான தொற்று நோய்களாலும் பாதிக்கப்படுவது தடுத்து நிறுத்தப்படுகின்றன.

இதனால் சிறுநீரகம் ஆரோக்கியமாக செயல்பட முடிகின்றது. மேலும் நுண்ணிய வடிகுழல்கள் என்று சொல்லக்கூடிய நெப்ரோன்கள் வலுப்பெறுகின்றன. நுரையீரல், இருதயம் போன்றன பாதிப்பில் இருந்து காகக்கப்படுகின்றது. உடலில் தேங்கியுள்ள கழிவுகளை கரைத்து சிறுநீரகம் வழியாக வெளியேற இம் மூலிகைகள் பெரிதும் உதவுகின்றன. மூலிகை மருத்துவத்தால, நன்மைதானே தவிர, தீமை எதுவும் வராது. உடலுக்கு எந்தக் கெடுதலும் இல்லை. பரிசோதனை செலவுகளும் அதிகமில்லை.

# அரச ஊடகங்களின் செயற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையாளர் எச்சரிக்கை!

(கொழும்பு)

தேர்தல் காலங்களில் அரச உடகங்களின் செயற்பாடுகள் குறித்து, தேர்தல் ஆணையாளர் அவ்வுடங்களின் பணிப்பாளர்களுக்கு எச்சரிக்கைக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

தேர்தல் காலத்தில் செயற்பட வேண்டிய விதம் குறித்து, தம்மால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைவாகச் செயற்படாவிட்டால் அவ்வூடங்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு அதிகார சபையைத் தாம் நியமிக்க வேண்டியேற்படும் என்று தனது எச்சரிக்கை கடிதத்தில் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கே தேர்தல் ஆணையாளரினால் இந்தக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தமக்கு இத்தகைய கடிதம் ஒன்று கிடைத்திருப்பதை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கை அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரமே அவர் இந்த எச்சரிக்கைக கடிதங்களை அரச ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இந்தத் திருத்தச் சட்டத்தின் கீழ் அரச ஊடகங்களைத் தேர்தல் ஆணையாளர் பொறுப்பேற்க முடியுமெனப் பலதரப்பட்டோராலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் இலங்கையின் தனியார் ஊடகங்கள் பலவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் நெருங்கிய தொடர்புடையவை என்ற வகையில், அவை அதிகம் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக செயறபட்டு வருவதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதேவேளை, அரச ஊடகங்களைப் பொறுப்பேற்கவும், அவற்றின் செயற்பாடுகளைக் கண் காணிக்கவும், கட்டுப்படுத்தவும இலங்கையின் 17ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தின் கீழ் விஷேடமாக அதிகாரி ஒருவரை நியமனம் செய்யவும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவுக்கு இடமுண்டு என மனித உரிமைகள் மற்றும் "சட்ட நிறுவனமான சட்டத்தின் ஆட்சிமையம்" அண்மையில் விஷேடமாகச் சுட்டிக்காட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(யே-18)

## ஏ.பீ.சி.செய்திச் சேவை அனுமதிப் பத்திர உரிமை பறிபோனதற்கான மர்மம் மெல்லத் துலங்குகிறது

(கொழும்பு)

அவுஸ்திரேலிய நிறுவனம் ஒன்று இலங்கையில் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் நிறுவுவதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோடு நெருங்கிய தொடர்புடைய அமைச்சர் ஒருவரின் செல்வாககின் மூலமே இந்த அனுமதிப் பத்திரம் ஊடகத்துறை அமைச்சினால் வழங்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இலங்கையின் ஊடகத்துறை அதிகாரங்கள் லக்ஷ்மன் கதிர்காமரினால் பொறுப்பேறகப்பட்ட பின்னா, ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஒலிபரப்பு அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டமை தெரிந்ததே.

இதேவேளை, இப் புதிய நிறுவனதிற்கு தொலைக்காட்சி ஒளிபரப்பு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காகவே ஆசிய ஒலிபரப்புக் கூடடுத்தாபனத்தின் அனுமதிப்பத்திர உரிமை பறிக்கப்பட்டதா என்ற சந்தேகமும் தற்போது வலுப்பெற்றுள்ளது.

(உ)

## பெற்றோர்களுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் மாணவர்களது செயற்பாடுகள் குறித்து அவர்களது பெற்றோர்களுடனான அவசர கலந்துரையாடலொன்று இன்று செவ்வாய்க்கிழமை மு.ப.10.00மணிக்கு மேற்படி கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

அனைத்து மாணவர்களதும் பெற்றோர்களை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்படடுள்ளதுடன், வெளிமாவட்ட மாணவர்களது பெற்றோர்களை எதிாவரும் 28ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10.00மணிக்கு கல்லூரிக்கு வருகை தருமாறும் யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் அறிவித்துள்ளார்.(உ-18,84)

## இசை ஆராதனை

(யாழ்ப்பாணம்)

யாழப்பாணம் நீராவியடி அருள் மிகு ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய மண்டலாபிஷேக விழாவை முன்னிடடு இன்று முதல் 10தினங்கள் இசை ஆராதனை இடம்பெறவுள்ளது.

இன்று மாலை 6.00மணி முதல் 7.00மணிவரை பிரம்மஸ்ரீ எஸ்.சர்வேஸ்வர சர்மாவின் வயலின் இசை பக்க வாத்தியங்கள் சகிதம் இடம்பெறவுள்ளது.

(உ-18)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

## இரண்டாம் பகுதி

55

### 2 புத்தள மாவட்டத்துச் சமுதாய நிலைகள்

### (ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்து அதிகாரியின் அறிக்கை ஒன்றில் உ-ள்ள பகுதி)

**விவாகரத்து**

விவாகரத்துகள் சோனகரிடையே அதிகம் ஏற்படுகின்றன.சில சமயங்களிலே சிறு பிரச்சினைகளால் அவை ஏற்படுகின்றன. தக்க காரணமின்றியும் விவாகரத்துகள் உண்டாகின்றன. தனது மனைவியைக் கைவிட விரும்பும் கணவன்ஒருவன், மௌலவியிடம் போய் அவளோடு தான் கூடி வாழ முடியாது என்று சொல்லுவான். அவளின் சீதனத்தையும் மகரையும் அவளிடம் ஒப்படைக்கப்போவதாகவுஞ் சொல்லுவான். கணவன் மனைவி ஆகியோருக்கிடையில் ஒற்றுமை ஏற்படுத்துவதற்கு மௌலவி மூன்று தடவைகள் முயற்சி செய்யவேண்டும். எதுவித பலனும் கிடையாதவிடத்து விவாகரத்து ஏற்படும். கணவனும்,மனைவியும் அவர்களின் கலியாணம் எழுதிய மௌலவியும், சாட்சிக்காரரும் கூடிய சமயத்திலே "இன்னாருடைய மகளாகிய இன்ன பெயருடைய பெண்ணை நான் விவாகரத்துச் செய்கின்றேன்" என்று கணவன் மூன்று தடவை சொன்னதும் அவர்கள் பிரிந்து விடுகின்றனர்.

மனைவியானவள் விவாகரத்துச் செய்ய விரும்பினாலும் இந்த முறையே பின்பற்றப்படும். அவளுடைய சீதனத்தைத் திருப்பிக் கொடுப்பதற்குக் கணவன் கடமைப்பட்டிருப்பான்: ஆயினும், கலியாணம் முடித்த பொழுது அவள் கொண்டுவந்த வட்டுத்தளபாடங்களும் அவளுடைய காசு கொண்டு வாங்கிய தளபாடங்களும் அவளுக்கு உரித்தாவதில்லை.

மனைவியின் சம்மதமின்றிக் கணவன் விவாகரத்துக் கோருமிடத்து அவளுடைய சீதனத்தையும் மகரையும் அவன் விட்டுக்கொடுக்கவேண்டும். மனைவி ஒருத்தி அதனைக் கோருமிடத்து அவள் மகரை இழந்து விடுகிறாள். விவாகரத்துச் சம்பிரதாய பூர்வமாகப் பரஸ்பர இணக்கத்துடன் நடைபெறுகின்ற பொழுதும் சுயநலமே அதற்கான அடிப்படைக் காரணமாகும்.

விவாகரத்தினை முறையாகப் பெற்றுக்கொண்ட ஒருவன் மறு கலியாணம் செய்து கொள்ளலாம். ஆயினும் ஒரு பெண்ணைப் பொறுத்தவரையில் அவள் விவாகரத்துப்பெற்ற பின்,மறு கலியாணம் செய்வதற்கு 3 மாதங்களுக்கு மேலான காலத்துக்குப் பொறுத்திருக்கவேண்டும்.

இலகுவான முறையில் விவாகரத்துகள் ஏற்படுவதன் காரணமாகவே கணவன், மனைவி ஆகியோரின் சொத்துகள் கலப்பதில்லை. இயல்புக்குத் தக்க வரையிலே தன் மனைவியை ஆதரிப்பது கணவனின் கடமையாகும். செலவுக்கென அவன் கொடுப்பதெல்லாம் குறித்து வைக்கப்படும். அவனுடைய மரணத்தின் பின் அவனுடைய செலவுகளினால் உண்டான எல்லாம் அவனுடைய சொத்துகளோடு சேரும். கலியாணம் முடித்தகாலத்தில் மனைவி கொண்டுவந்த ஆடை ஆபரணங்கள், தளபாடங்கள் முதலியனவும், அவள் தனது பிராயசத்தினாலே சேமித்த முதலும் அவளுக்குரியனவாகும். அவள் இறந்த பின்பு அவையெல்லாம் அவளுக்குரியசொத்துகளாகவே கருதப்படும்.

இஸ்லாமிய சட்டங்களின் பிராகாரம் ஆண் சகோதரரும், சகோதரிகளும் ஒன்றாக் கலியாணஞ் செய்து கொள்ளலாம். அது எவ்வாறெனில் ஒருவன் தனது மனைவி மரணமாகிய பின் அவளுடைய சகோதரியை கலியாணம் பண்ணலாம். அத்துடன் ஒருவன் தனது இளைய சகோதரனின் விதவையை கலியாணம் பண்ணிக்கொள்ளலாம். தங்களுடைய உறவினரிடையிற் சொத்துகளை வைத்துக் கொள்வதற்கே இத்தகைய மிகவும் வெறுக்கத்தகுந்த கலியாணங்கள் நடைபெறுகின்றன. சோனகரிற் புத்திசாலித்தனம் உடையோர் இவற்றைக் கண்டிக்கின்றனர்.

தர்க்க ரீதியாக ஒப்புக்ககொள்ள முடியாதவை என்று விளக்குவதன் மூலம் இத்தகைய கலியாணங்கள் பலவற்றைப் புத்தளத்தில் நான் தடை செய்துள்ளேன்.

**பாகப்பிரிவினை**

ஒருவன் பிள்ளைகளில்லாது மரணமாகிப் போனால் மனைவியானவள் தான் கொண்டுவந்த சீதனத்தையும் அவளின் மகரையும் எடுத்துக்கொள்ளுவாள். அவன் பட்ட கடன்களை நீக்கி எஞ்சியுள்ள அவனுடைய சொத்துக்களிற் காற்பங்கு அவளுக்குரியதாகும். எஞ்சிய பாகம் அவனுடைய ஆண் சகோதரரைச் சேரும். சகோதரர் இல்லாதவிடத்து மற்றும் உறவினருக்கு அது உரியாதாகும் கணவன் இருக்க மனைவி இறந்தால் அவளுடைய சொத்துகளில் அரைவாசி கணவனுக்கும் மற்றைய அரைவாசி அவளுடைய உறவினருக்கும் உரியதாகும்.

பிள்ளைகளிருக்குமிடத்துக் கணவன் இறந்து போனால் சொத்துகளில் எட்டிலொரு பங்கு விதவைக்குரியதாகும். கணவனுக்கு முன் மனைவி இறந்து போனாற் சொத்துகளில் நாலில் ஒரு பங்கு கணவனுக்குரியதாகும். இவ்விரு சந்தர்ப்பங்களிலும் எஞ்சியுள்ள சொத்துகள் பிள்ளைகளின் உரித்தாகும். எல்லாப் பிள்ளைகளும் ஆண்களாகவோ பெண்களாகவோ இருப்பின் சொத்துகள் சமபங்குகளாகப் பிரிக்கப்படும். பிள்ளைகளில் ஆண்களும், பெண்களும் இருப்பார்களேயானால் ஆணுக்கு இரண்டு பங்கும் பெண்ணுக்கு ஒரு பங்கும் என்ற வீதமாகப் பாகப்பிரிவினை என்பது நியதி.

**வியபிசாரம்**

களவாகப் பெண்களோடு கூடுவோருக்கு அவர்களுடைய சமயத்திலுள்ள சட்டத்தின் பிரகாரம் தண்டனை கிடைக்கும். குற்றவாளியைப் பள்ளி வாசலுக்கு அழைத்துச் சென்று சமயாசாரங்களை அறிந்த முதியோரின் முன்னிலையில், அவனை நிலத்திலே முகக்குப்புறப்படுக்கச் செய்து சவுககினால் நூறு தரம் அடிப்பது வழக்கம். ஆனால் எளியவர்களுக்கு மட்டுமே இத் தண்டனை பொதுவாக வழங்கப்படும். செல்வர்களைத் தண்டனையில் இருந்து சமூகம் காப்பாற்றிக்கொள்ளமுடியும்.

**முக்குவர்**

முக்குவரிடையே உரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவரும் இஸ்லாமியரும் உள்ளனர். உரோமன் கத்தோலிக்கரைப் பொறுத்தவரையிற் கத்தோலிக்க குருமாரின் மிகக் கடினமான கட்டுப்பாடுகளின் மத்தியிலும் அவர்கள் இரகசியமாக இந்து சமய நம்பிக்கைகளையும் வழமைகளையும் அனுசரிக்கின்றனர். உலகின் இந்தப்பாகத்திலே, புறச் சமயிகளாயிருந்து கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றப்பட்டவர்களிடையில், இந்த இயல்பு பொதுவான ஒன்றாகும். இஸ்லாமியரான முக்குவரின் பழக்கவழக்கங்கள்,வழமைகள், நம்பிக்கைகள் ஆகியன பெரும்பாலும் கிறிஸ்தவ முக்குவரின் முறைகளை ஒத்தனவாகும். ஆயினும் அவர்கள் கூடுதலாக விவசாயம், மந்தை வளர்ப்பு ஆகியவற்றில், ஈடுபடும் தொழிலாளராக உள்ளனர். கிறிஸ்தவரோடு ஒப்பிடுமிடத்து அவர்கள் மிகவும் ஏழைகளாவர்.

**சொத்துரிமை**

(ஆண்) சகோதரரின் பிள்ளைகள் சகோதரிகளின் பிள்ளைகளைக் கலியாணம் செய்யலாம். சொத்துகளை உறவினரிடையே வைத்துக்கொள்வதற்கே அத்தகைய கலியாணங்கள் நடக்கின்றன. கலியாணம் முடிக்கும் பொழுது கணவனும் மனைவியும் கொண்டுவந்த சொத்துகள், அவர்கள் இறந்த பின், முறையே அவரவரது நெருங்கிய உறவினரைச் சேரும். கணவனும் மனைவியும் தேடிய தேட்டம் எல்லாம் சம பங்குகளிற் பிள்ளைகளுக்கு உரியனவாகும். பிள்ளைகள் இல்லாத விடத்து அரைவாசிப் பங்கு கணவனது உறவினருக்கு உரியதாகும். மற்றைய அரைவாசியும் மனைவியின் உறவினருக்கு உரியதாகும்.

(தொடரும்)

---

### அரசியல் ஸ்திரமின்மையால்

## உல்லாசப் பிரயாணிகள் வருகையில் பாரிய வீழ்ச்சி

(கொழும்பு)

திடீர்ப் பாராளுமன்றக் கலைப்பானது நாட்டின் அபிவிருத்திக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் எனப் பலஅரசியல் ஆய்வாளர்களும் சுட்டிக்காட்டி வரும் இந்நிலையில் ஜனாதிபதியின் இவ்வாறான திடீர் நடவடிக்கைகளினால் உல்லாசப் பயணத் துறையும் தற்போது பாரிய வீழ்ச்சி கண்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஜனாதிபதிக்கும்,பிரதமருக்கும் இடையில் ஏற்பட்ட காழ்ப்புணர்வு காரணமாக நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை வலுவிழந்து வந்தது. கடந்த ஜனவரியில் 50 ஆயிரம் வெளிநாட்டு உல்லாசப்பிரயாணிகள இங்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இலங்கையின் அரசியல் நெருக்கடி காரணமாக இப்பிரயாணிகளின் தொகை எதிர்பார்க்கப்பட்ட அளவை விட மிகக் குறைவடைந்தது.

இந்நிலையில்,கடந்த 7ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டதால்,இம்மாதம் உல்லாசப் பிரயாணிகளின் வருகையில் இன்னும் பாரிய வீழ்ச்சியடையும் அபாயம் தோன்றியுள்ளது.

எதிர்வரும் ஏப்ரலில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்காக நடைபெறும் பிரசாரங்கள் இதன்போது இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் போன்ற ஐயப்பாடுகளினாலேயே உல்லாசப் பிரயாணிகளின் வருகை வீழ்ச்சியடையும் என சுற்றுலாத்துறை அமைச்சர் காமினி லொக்குகே கருத்துத் தெரிவித்துள்ளார். (யே-18)

---

### அரச ஊடகங்கள் மூலமாக

## தேர்தல் பிரசாரங்களை நடத்த தேர்தல் ஆணையாளர் அனுமதி

(கொழும்பு)

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், தேர்தல் பிரசாரங்களுக்கான திட்டங்களைத் தயாரிப்பதில் அரசியல் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் ஈடுபட்டு வருகின்றன.

கட்சித்தலைவர்களின் தலைமையில் மாவட்ட மட்டத்தில் பிரதான கூட்டங்களை நடத்த அரசியல் கட்சிகள் தயாராகி வருகின்றன.

அதன்படி ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் 26ஆம் திகதி கணடியில் அதன்தேர்தல் பிரசாரப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் எதிர்வரும் 26ஆம் திகதி அனுராதபுரத்தில் தனது தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளவுள்ளது.

கிராம மட்டத்திலும் கூட்டங்களை நடத்துவதற்கு கட்சிவேட்பாளர்கள் ஏற்பாடுகளைச்செய்து வருகின்றனர்.

இதேவேளை, தேசிய வானொலி தொலைக்காட்சி என்பவற்றின் ஊடாக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்கள் என்பன தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளுவதற்கான அனுமதியை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க வழங்கியுளளார்.

(யே-60,10)

---

## தமிழக மீனவர்கள் விடுவிப்பு

(கொழும்பு)

இலங்கை மீனவர்களால் பிடிக்கப்பட்ட 82 தமிழக மீனவர்கள் இராமேஸ்வரம் வந்து சேர்ந்துள்ளனர் என்று தமிழக காவல்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் 11 பேர் தங்கச்சிமடத்தையும், மற்றவர்கள் நாகபட்டினத்தையும் சேர்ந்தவர்கள்.

சமீபத்தில் கோடிக்கரை கடற்பகுதயில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது இவர்கள் இலங்கை மீனவர்களால் பிடித்துச் செல்லப்பட்டுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (து)




நல்லூர் கைத்தொழில் வணிக மன்றத்தில் அண்மையில் இடம் பெற்ற ஒப்பந்தகாரர்களுக்கான வலுவூட்டல் கருத்தரங்கில் நெக்கொட் நிறுவனத் திட்டப் பணிப்பாளர் த.லங்காநேசன் கருத்துரை வழங்குகிறார். (ஜங்கரன்)



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால வெளியிடப்படும் "ஞானச்சுடர்" ஆத்மீக சஞ்சிகையின் எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் ,எழுத்தாளர்களுடன் ஆச்சிரம நிர்வாகி எஸ். மோகனதாஸ் சுவாமிகளைப் படத்தில் காணலாம். (படம்: மருதங்கேணி நிருபர்)

# ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான ஆட்சியே இனப் பிரச்சினைக்குத் தீர்வு

## மனிதநேய அமைப்புகள் நோர்வேயிடம் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

அரசியல் ஜனநாயகத்தில் இருந்து சமூக ஜனநாயகத்திற்கு மாற்றுநடை போடவும் தமிழ் பேசும் மக்களது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களில் அவர்கள் சுய நிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கும் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான ஆட்சிமுறை ஒன்றை நிலைபெறச்செய்வதே தீர்வாக அமையும் என்று யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் நோர்வேயிடம் வலியுறுத்தியுள்ளது.

கடந்த 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஈராண்டு பூர்த்தியையொட்டி யாழ். மாவட்ட மனிதயநேய அமைப்புகளின் ஒன்றியம் இலங்கைக்கான நோர்வே தூதுவருக்கு 22.2.2004 திகதியிட்டு கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தது.

ஒன்றியத் தலைவர் எஸ். பரமநாதன், இணைச் செயலாளர் எம்.தாமோதரம் ஆகியோர் கையெழுத்திட்டிருந்த மேற்படி கடிதத்திலேயே இவ்விதம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும்,

### ஆக்கபூர்வமான முயற்சிகள்

சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து மக்களின் அன்றாட வாழ்வுக்கு குந்தகம் ஏற்படுத்திக் கொண்டிருந்த இலங்கையின் இனப்பிரச்சினைக்கு முடிவுகாண தங்களது அரசு மேற்கொண்டுள்ள ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு மனப்பூர்வமான நன்றியறிதலை தெரிவிக்கின்றோம்.

இலங்கை அரசுக்கும் தமிழீ விடுதலைப்புலிகளுக்குமிடையில் கையெழுத்தான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த யுத்த நிறுத்த உடன்படிக்கை வரவேற்றகத்தக்க ஒன்றாகும்.

இடம்பெயர்ந்த மக்கள் தங்களது சொந்த இடங்களில் மீளக் குடியேறுவது சம்பந்தமாக இற்றைவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாதிருப்பது வருத்தத்திற்குரிய விடயமாகும்.

நலன்புரி முகாம்களில் அடிப்படை வசதிகள் கூட அற்ற நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கும் இடம்பெயர்ந்த மக்களை அவர்களுடைய சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கான விரைவு ஏற்பாடுகள் செய்துகொண்டிருப்பதால் அவர்களது தன்னம்பிக்கை வளர்ச்சியடைவதுடன், தங்கள் சொந்த இடத்தில் மன நிம்மதியுடன் வாழ முடியும்.

### நஷ்ட ஈடு

ஐக்கிய நாடுகளின் வழிப்படுத்தலுடன் இடிந்த அல்லது சேதமடைந்த வீடுகளையும் வர்த்தக ஸ்தாபனங்களையும் பாடசாலைகளையும் வணக்கத்திற்குரிய இடங்களையும் திருத்தியமைக்க வேண்டிய நஷ்ட ஈட்டை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பும் கடமையுமாகும்.

இலங்கையின் அரசியல் யாப்பின 14 (1) (எச்) பிரிவின்படி அடிப்படை உரிமைகளுக்குப் பாதுகாப்பளிக்கப்படுகின்றது.

இலங்கைக்குட்பட்ட பகுதிகளில் ஒவ்வொரு பிரஜைக்கும் சுதந்திரமாக நடமாடவும், உரிய இருப்பிடத்தை தேர்ந்தெடுக்கவும் உரிமை உண்டு என அந்த வாசகம் குறிப்பிடுகிறது. பாதுகாப்புப் பிரிவின் சீர்திருத்தக் கொள்கை, சமாதானத்திற்கான யுத்தம் என்பதைவிட சமாதானத்தையும் யுத்தத் தடுப்பையுமே வற்புறுத்துகின்றது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையே சமாதான நடவடிக்கையின் அத்திபாரமாகவும் வடக்கு - கிழக்கில் வாழும் மக்களின் உடனடி நிவாரணத்தையும் மனிதாபிமான உதவிகளையும் குறுகிய கால மீள் குடியேற்றல் நடவடிக்கைகளையும் வழங்கக்கூடிய 3 முக்கிய அமைச்சுக்களையும் ஜனாதிபதி பொறுப்பேற்றது துரதிஷ்டவசமானது.

இதனால் சமாதான நடவடிக்கைகளும் மீளக் குடியமர்த்தல் நடவடிக்கைகளும் சின்னாபின்னப் படுத்தப்பட்டுள்ளன.

### தேர்தல் முடிவு

இந்தப் பிரச்சினையில் ஜே.வி.பியினுடைய நிலைப்பாடும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினது நிலைப்பாடும் வேறுபாடானவையாக இருப்பதால் வரப்போகும் தேர்தல் முடிவுகள் யுத்த நிறுத்த ஒப்பந்தம், சமாதான நடவடிக்கை ஆகியவற்றுக்குச் சாதகமாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் மூன்றாவது வாசகத்தின்படி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதே இடத்தில் கண்காணிப்பு முயற்சிகளை மேற்கொள்ள வழிவகுத்துள்ளது.

கண்டி-யாழ்ப்பாணம் ஏ-9 பாதையை பொதுமக்கள் பயன்படுத்துவதற்கான நேரக்கட்டுப்பாடு அகற்றப்படவேண்டும்

பிரச்சினைகளைத் தீர்ப்பது சம்பந்தமாக 4 (3)ஆவது வாசகம் இரு தரப்பினரதும் சட்ட ஆலோசகர்களினதும் சமமதத்துடன் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

இத்தகைய சில குறைபாடுகளுடனும் யுத்த நிறுத்த உடன்படிக்கையானது இரண்டாண்டு காலமாகத் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது.

இலங்கையில் நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக இரு தரப்பினர்களுக்குமிடையில் பரஸ்பரம் புரிந்துணர்வை ஏற்படுத்தி பேச்சுவார்த்தை மூலம் தீர்வொன்றைக் காண நோர்வே அரசு சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் எடுத்து வரும் முயற்சிகள் பாராட்டுக்குரியதாகும். சமாதான நடவடிக்கைகளுக்கு ஒருங்கிணைப் பாளராகவும் மத்தியஸ்தராகவும் தாங்கள் ஆற்றும் பணி மதிப்பிற்குரியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இககடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி, கௌரவ பிரதமர், தமிழீழ விடுதலைப்புலிகளின், தலைவர், இலங்கையில் உள்ள வெளிநாட்டு தூதராலயங்கள் என்பவற்றுக்கு அனுப்பப்பட்டுள்ளன. (உ)

# உத்தேச ஊடகக்கொள்கைக்கு ஐ.ம.சு.மு.அரசு வித்திடும்

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசமைத்தால் புதிய



தொரு ஊடகக் கலாசாரம் உருவாக்கப்படும் எனத் தெரிவித்திருக்கிறார் முன்னாள் எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர்,

நாட்டின் தனித்துவத்தை பிரதிபலிக்கும் வகையில் சமய மற்றும் கலாசார அம்சங்கள் நிறைந்ததாக இந்த உத்தேச ஊடகக் கலாசாரம் அமைந்திருக்கும்.

நாட்டின் வரலாற்றில் என்றுமில்லாதவாறு கடந்த 2 வருட காலத்தில் கலாசாரப் பரிமாணங்கள் சீரழிந்திருக்கின்றன.

சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் பொருத்தமில்லாத நிகழ்ச்சிகளை இலத்திரனியல் ஊடகங்கள் ஒளிபரப்பி வந்தன.

இதன் காரணமாக நாட்டு மக்களினால் இதுவரை காலமும் கட்டிக்காக்கப்பட்டுவந்த கலாசார விழுமியங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டன என்று சுட்டிக்காட்டியுள்ளார். (உ-60,8)

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப் பீட இறுதி வருட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று பி.ப.10.00 மணிக்கு மாணவர் பொது அறையில் இடம் பெறவுள்ளது. (உ)

# பாடத்தெரிவுக் கலந்துரையாடல்

(ஆனைக் கோட்டை)

தீவக கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான கல்வித் பொதுத் தராதர உயர் வகுப்பு பாடத்தெரிவு தொடர்பாக கருத்தரங்கு எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமை சோ வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (உ-20)

# திறப்பு விழா

(பருத்தித்துறை)

வலிகாமம் வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாச அலுவலகம் அல்வாய் வடமேற்கில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

சமாசத் தலைவர் எம். பயஸ் லோகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அலுவலக பெயர்ப் பலகையை கடற்புலிகளின் வல்வெட்டித்துறைப் பொறுப்பாளர் அன்பழகன் திரை நீக்கம் செய்து வைத்தார்.

கடற்றொழிலாளர் திணைக்கள யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.எ. யோசெப் அலுவலகத்தை சம்பிரதாயபூர்வமாக நடாவைவெட்டித் திறந்து வைத்தார். (உ-52)

# யோகாசன கண்காட்சி

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் உள்ள தும்பளை யோகா சாந்தி நிலையத்தின் யோகாசன கண்காட்சி தென் புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தின் அதிபர் திருமதி சௌகுந்தலாதேவி இந்திரராஜா தலைமையில் இன்று நடைபெறவுள்ளது. (உ -52)

# பெரும்போக நெல் கொள்வனவுக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை

(கொழும்பு)

விவசாயிகளிடமிருந்து பெரும்போக நெல்லைக்கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை கூட்டுறவுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இந்த வகையில் 67 ஆயிரத்து 400 மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்ய முடியுமென கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,126 கூட்டுறவு சங்கங்களும் 916 கொள்வனவு நிலையங்களும் மேற்கொள்ளவிருக்கும் நெல் கொள்வனவு நடவடிக்கைகள் பற்றி நெல் உற்பத்தி செய்யப்படும் பகுதிகளில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நெல்லைக் களஞ்சியப்படுத்தவென 578 களஞ்சியசாலைகள் தயார் நிலையில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-60,8)

# சவால்களுக்கு அஞ்சி கண்காணிப்பு பணிகளை கைவிடப் போவதில்லை

## க.கா. குழுத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்ட யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை கடந்த இரண்டு ஆண்டு காலத்திலும், இருதரப்பினராலும் திருப்திகரமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்ததுடன், இரு தரப்பினரும் யுத்த நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினருக்கு ஆதரவும் பூரண ஒத்துழைப்பையும் தந்துள்ளார்கள் என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர், மேஜர் ஜெனரல ரொன் பயூறு ஹெவ்டே தெரிவித்துள்ளார்.

அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும இடையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டு, இரண்டு வருட பூர்த்தியையொட்டி கருத்துத் தெரிவித்தபோதே யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன் பியூறு ஹெவ்டே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும கூறியதாவது,

ஆகும், விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து இருசாராருக்குமிடையே நிலவி வந்த யுத்தம் நின்று விட்டது. யுத்தம் நின்றுவிட்டதை அடுத்து இரண்டு பகுதியினரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத் தொடங்கினர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளையடுத்து இலங்கை விவகாரங்களில் சர்வதேச சமூகத்தின் கவனம் திரும்பியதுடன் ஆர்வம் காட்டத் தொடங்கினர். இதனையடுத்து இலங்கை விவகாரங்களில் தம்மை ஈடுபடுத்தத் தொடங்கினர்.

இவற்றுக்கும் மேலாக அரசும், விடுதலைப் புலிகளும் இந்த ஒப்பந்த விடயத்தில் எமக்கு முழுமையான ஆதரவையும், பூரண ஒத்தழைப்பையும் தந்திருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

யுத்த நிறுத்த உடன்படிக் கைக் காலத்தில், கூடியளவு யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்டவர்கள் விடுதலைப் புலிகளாகும். இந்த ஒப்பந்த மீறல்கள சமாதான நடவடிக்கைகளை ஒரு போதும் பாதிக்க வில்லை. ஒப்பந்த மீறல்களின் போது இரு தரப்பினருக்குமிடையில் தொடர்புகளை ஏற்படுத்தி அளவுக்கு மீறாவகையில் நாம் பார்த்துக் கொண்டோம்.

யுத்தநிறுத்த மீறல்களின் போது எமது உத்தரவுகள் தொடர்பாக கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் எமது உத்தரவுகளை இருதரப்பினரும் பின்பற்றிவந்தனர். ஒப்பந்தம் தொடர்பான சரத்துக்களில் சில அம்சங்களை நிறைவேற்றுவதில் பிரச்சினைகள் தோன்றியபோதும் அவை தொடர்பாக நாம் விவாதித்து வந்தோம்.

ஜனநாயக தேர்தல் காலங்களில் யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக ஏற்படக் கூடிய எந்தவிதமான சவால்களையும் சமாளிப்பதற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தயாராக உள்ளது.

இந் நிலையில் யுத்த நிறுத்த உடன்பாடு குறித்து அரசியல் கட்சிகள் தெரிவிக்கும் கருத்துக்கள் தொடர்பாக நான் எதையும் கூற விரும்பவில்லை என்று கூறியுள்ளார். (ம)

# கண்டல் மரங்கள் அழிவடையும் அபாயம்

(மருதங்கேணி)

கடந்த காலயுத்த நடவடிக்கை காரணமாக, அம்பன், குடத்தனை மற்றும் நாகர்கோவில் பகுதிகளில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான கண்டல் மரங்கள் அழிக்கப்பட்டிருப்பதாக மண்றகாடு இளைஞர் சமூகப் பொருளாதார அபிவிருத்தி அமைப்பினர் மேற்கொண்ட ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, தொண்டமனாறுக்கும் சுண்டிக்குளத்திற்கும் இடையிலான ஏரியை நன்னீராக்கும் நடவடிக்கையின் காரணமாகவும் இங்குள்ள கண்டல் மரங்கள் மேலும் அழியலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (உ-35)

## கோப்பாய், இருபாலை பகுதிகளில்

# தினமும் திருடர் தொல்லை இரவுப் பொழுதில் பயம்; பீதி

(இருபாலை)

கோப்பாய் மற்றும் இருபாலைப் பகுதிகளில் அண்மைக் காலங்களில் அதிகரித்து வரும் திருடர் தொல்லையைக் கட்டுப்படுத்தும் வகையில் அங்கு விழிப்புக் குழுக்களை அமைப்பதன் அவசியம் குறித்து பாதிக்கப்படும் பொது மக்கள் தரப்பில் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

மேற்படி பகுதிகளில் கடந்த வாரத்தில் பல் வேறு திருட்டுச் சம்பவங்களும் திருட்டு முயற்சிகளும் இடம் பெற்றுள்ளன.

இதேவேளை, திருடர்களின் கைவரிசைக்கு இப் பகுதி ஆலயங்களும் இலக்காகி வருவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது. திருடர் தொல்லை காரணமாக இப் பகுதி மக்கள் இரவுப் பொழுதைப் பெரும் பீதியுடனேயே கழித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-84)

# இன்று ஒரு தகவல்

## வாழ்க்கைப் பயணம்

மாமனாரிடமிருந்து கடிதம் வந்திருந்தது. ஊரில் விசேஷம் குடும்பத்துடன் வந்துவிட்டுப் போங்கள் என்று. கணவன் மனைவி மூன்று வயதுப்பிள்ளை. இதுதான் அந்தக் குடுமபம். மிக வேண்டப்பட்ட ஒரு நண்பரிடம் கார் இருந்தது. அதை வாங்கிக் கொண்டு மூவரும் புறப்பட்டனர். புறப்படுவதற்கு நீண்டநேரம் ஆகிவிட்டது. ஒரு காட்டின் வழியே போய் ஆகவேண்டும்.

கணவன் கார் ஓட்டுகின்றான். மனைவியிடம் சுவாரஸ் யமாகப் பேசிக்கொண்டு வந்ததில் வழியைத் தவற விட்டுவிட்டான். அந்த வழியே போகின்ற, வருகின்ற வர்களிடம் வழியை விசாரிக்கின்றான். ஆளாளுக்கு ஒருவிதமாக வழி சொன்னார்கள். இவன் குழம்பிப் போய்விட்டான். மெதுவாகப் பக்கத்தில் உள்ள பொலிஸ் ஸ்ரேஸனைக் கண்டுபிடித்து அங்கு போய் விபரம் கேட்டான். அங்கு சரியான விபரத்தைக் கேட்டறிந்து கொண்டு மீண்டும் புறப்பட்டான.

இப்படி வழி கேட்டுக் கொண்டிருந்ததனால் ஒரு மணித்தியாலத்திற்கு மேல் தாமதமாகிவிட்டது. இருட்ட ஆரம்பித்துவிட்டது. காட்டுக்குள் கார் வேகமாகப் போய்க் கொண்டிருக்கும் போது திடீரென்று நின்றுவிட்டது. இவன் இறங்கிப் போய் எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்தான். எல்லாம் சரியாக இருந்தும் கார் ஸ்டார்ட் ஆகவில்லை.

சீக்கிரமாக என்னவென்று பாருங்கள்! இந்த நடுக் காட்டில் யாராவது நம்மை அடித்துப் போட்டுவிட்டுப் போனால் கூட என்னவென்று கேட்க ஆளில்லை என்று அந்தப் பெண்மணி அவசரப்படுத்தினார். "ஆமாம்! இப் போது அவசரப்படு" புறப்படும்போதே நேரத்துடன் கிளம்பியிருந்தால் இப்படி ஆகியிருக்குமா? அலங்காரம் செய்து முடிக்கவே அரைநாள் ஆகிவிட்டது. இப்போது அவஸ்தைப்படுகிறோம். எல்லாம் உன்னால் தான்" என்று கத்தினான் அவன்.

"என்னால் ஒன்று தாமதம் இல்லை. அதுதான் சாப் பிட்டு முடித்து மூன்று மணிக்கே வீட்டைவிட்டு புறப்பட்டு விட்டோமே. நீங்கள்தான் வழியைத் தவறவிட்டுவிட்டு எங்கெங்கோ சுற்றி யாரிடமோ வழிகேட்டு தாமதப்படுத்தி விட்டீர்கள். இல்லாவிட்டால் என் அப்பா வீட்டுக்கு இந்நேரம் போய்ச் சேர்ந்திருக்கலாம்" என்றார் மனைவி. "உன்னால் தான் தாமதம்" என்றான் அவன். "இல்லை உங்களால் தான் தாமதம்" என்றார் மனைவி.

இருவரும் சண்டைசெய்வதைப்பார்த்துவிட்டு காருக்குள் இருந்த பிள்ளை "ஸ்டொப்! ஸ்டொப்!" என்று கத்தியது. குழந்தை இப்படிக் கூறியதைக் கேட்டதும் அவர்களுக்குச் சிரிப்பு வந்து விட்டது. கோபம் மறைந்து விட்டது. "கார் நின்று விட்டால் தள்ள வேண்டியதுதானே... அதற்கு ஏன் இப்படி நீங்கள் இருவரும் சண்டை செய்கின்றீர்கள்? என்றது பிள்ளை.

"சரி... குழந்தை கூறியபடியே செய்து பார்ப்போம்" என்றான் கணவன். மனைவியைக் காருக்குப் பின்புறம் நின்று தள்ளச் சொல்லிவிட்டு கணவன் ஸ்டியரிங்கின் அருகில் நின்று முன்பக்கம் தள்ளினான். குழந்தை காருக்குள்ளே உட்கார்ந்து கொண்டு காரின் முன்பக் கக் கண்ணாடியை தள்ளியது. மிகவும் சிரமப்பட்டுத் தள்ளியது. அதற்கு என்னவோ தானும் காரைத் தள்ளு வதாக நினைப்பு. கொஞ்சம் தள்ளி விட்டு ஸ்டார்ட் செய்தான். மனைவிக்கு மிகுந்த மகிழ்ச்சி "நான் சொன்னது சரியாய் போனது" என்று கூறி கைகொட்டிச் சிரித்தது குழந்தை.

ஒரு வழியாக ஊர் போய்ச் சேர்ந்தனர். ஏன் இவ் வளவு தாமதம்? என்றார் மாமனார். கணவனும், மனைவியும் மாறிமாறிக் காரணத்தைக் கூறிக்கொண்டிருந்தனர். அவர்கள் முடித்தபின் குழந்தை பேச ஆரம்பித்தது "தாத்தா! அவர்கள் சரியா கூறவில்லை. நான் கூறுகிறேன் கேளுங்கள். கார் வெளிக்கிடவில்லை. எல்லோரும் தள்ளினார்கள். அப்போதும் கிளம்பவில்லை. நான் காருக்குள்ளிருந்தே வேகமாகத் தளளினேன். அதன் பின்தான் வெளிக்கிட்டது" என்று மிக வும் பெருமையாகக் கூறியது. அதைக்கேட்டு மூவரும் சிரிததனர்.

இதைக் கேட்கும் போது நாமும் தான் சிரிக்கின்றோம். ஒருகணம் நன்கு யோசித்துப் பாருங்கள். இறைவனின் குழந்தைகளாகிய நாம் வாழ்வில் ஒவ்வொரு கணமும் இதேமாதிரித்தான் பெருமை அடிக்கிறோம். இந்தக் கதை யைக் கூறி இப்படி நம்மைப் பாத்துக் கேட்கிறார் சுவாமி சின்ம யானந்தர். நாமெல்லாம் காரினுள் உட்கார்ந்து கொண்டு கண்ணாடியைத் தள்ளிக் கொண்டிருக்கிறோம். அதனால் கார் போவதாகக் கூறிக்கொண்டு காலம் தள்ளிக் கொண்டி ருக்கிறோம்.

நமது ஆள் ஒருவன் ஒரு காரைத் திருடிக்கொண்டு வந்து விட்டான். பாதிவழியில் நின்றுவிட்டது. என்ன செய்வது? அந்த வழியேவந்த ஒருவரை அழைத்து "சார் இந்தக் காரைக் கொஞ்சம் தள்ளிவிடுங்கள். பிளீஸ்!" என்றான். "அவர் வந்தார். நான் இந்தக் காரைத்தள்ளி உனக்கு உதவமுடியாத நிலையில் இருக்கிறேன். அதற்கு இரண்டு காரணம் உண்டு. முதல் காரணம் நான் ஒரு பெரிய மனிதன். இது போன்ற வேலை செய்தால் எனக்குக் கௌரவக் குறைச்சல். இரண்டாவது காரணம் இந்தக்கார் என்னுடையது. அதைத்தான் நீ இப்போது தள்ளிக் கொண்டு வந்திருக்கிறாய்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அரசின் அறிவிப்பை ஆட்சேபித்து மட்டக்களப்பு மாவட்ட மாணவர்கள் மாபெரும் மனித சங்கிலிப்போராட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாபெரும் மனித சங்கிலிப்போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு மட்டக்களப்பு மாவட்ட மாணவர் சமூகம் ஏற்பாடு செய்துள்ளது.

யுத்த நடவடிக்கை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்கலைக்கழகம் மற்றும் கல்வியிற் கல்லூரிகளுக்கு அனுமதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது.

இந்நிலையில் போரினால் பாதிக்கப்படாத மாவட்டமாகவும் கல்வியில் முன்னேறிய மாவட் டமாகவும் மட்டக்களப்பு மாவட்டம் அரசாங்கத்தி னால் பிரகடனப்பட்டிருப்பதை ஆட்சேபித்தே எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி மாபெரும் மனித சங்கிலிப்போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக பாராளுமன்றத்திற்கு அறிக்கை ஒன்றினையும் மாணவர் சமூகம் அனுப்பவுள்ளத கவும் தெரியவருகிறது.

இதற்கமைய எதிர்வரும் மாதம் 2 ஆம் திகதி சகல கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாண வர்களும் ஓட்டமாவடி முதல் துறை நீலாவணை வரையான வீதியில் காலை 9.00 மணிமுதல் மு.ப. 11.00 மணிவரை வீதியின் இரு மருங்கிலும் மனிதச் சங்கிலியை ஏற்படுத்தி மட்டக்களப்பில் மாணவர் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை சர்வதேசத்திற்கு எடுத்தியம்புமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(உ-64,8)

# புரிந்துணர்வு ஒப்பந்த புறக்கணிப்பு போருக்கான முன் அறிவிப்பு

## ஜே.வி.பி. மீது பௌசி சாடல்

(கொழுமபு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் செய்து கொள் ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஜே.வி.பி. புறக்கணிக்குமாயின், அது நீண்ட காலப் பிரச்சினை களுக்கு காரணமாக அமையும் என முன்னாள் பொ.ஐ.மு. எம்.பியான ஏ.எச்.எம். பௌசியும் சப்பிரகமுவ முதலமைச்சர் மோகன் எல்லாவலவும் ஒருமித்துக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றிய ஜே.வி.பியின் அறிக்கை குறித்து இவர்கள் இருவரும் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

ஜே.வி.பி., புலிகளின் தலைவர் வே. பிரபாக ரனை கைது செய்ய நினைத்தாலோ அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தம் செல்லுபடியாகாது என்றாலோ அது மீண்டும் போரை ஆரம்பிப்பதற்கு வழி ஏற்படும்.

இது மிகவும் ஆபத்தான விடயம். இனப்பிரச் சினைக்கு தீர்வு காண்பதே தற்போது முக்கிய விடயம். இவ்விவகாரம் பற்றியே நாம் அனைவரும் கவனம் செலுத்தவேண்டும். சமர்தானத்திற்கு எதிரான சக்திகளுக்கு ஜனாதிபதி இடங்கொடுக்க மாட்டார் என நம்புகிறேன் என்று பௌசி தெரிவித்துள்ளார்.



இதேவேளை, மோகன் எல்லாவல கருத்துத் தெரிவிக் கையில்,

சமாதானத்திற்கு ஜனாதிபதி 100 வீத ஆதரவு தெரிவித் தால் கூட்டணிக் குள் ஜே.வி.பி. தனது விருப்புப்படி எதுவும் செய்ய முடியாது போய்விடும்.

இனப்பிரச்சினைக்கு முதலில் தீர்வு காணவேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பி.யும் தேர்தலில் கூட்டுச் சேர்ந்தாலும் எமது கொள்கைகள் ஜே.வி.பி.யினருடன் ஒத்துப்போகாது. ஆனாலும், அவர்களுடன் ஒரு உடன்பாடும் எமக்கு உண்டு. அதற்காக நாம் எதிர்காலத்தில் பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டி ஏற்படும். அவற்றை நாம் எதிர்கொள்வோம்.

சமாதானம் பற்றி கூட்டுக்கட்சியினர் எந்நிலைப் பாட்டைக் கொண்டிருப்பினும் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடு என்பது வெளிப்படை என்று குறிப்பிட்டுள்ளாா. (உ-6)

# இராசிபலன்

**24. 02. 2004**

**(மாசி 12, செவ்வாய்க்கிழமை)**

| | |
|---|---|
| சதுர்த்தி | பிற்பகல் 3.45 மணி வரை |
| ரேவதி | பிற்பகல் 5.13 மணிவரை |
| இராகுகாலம் | 3.30-5.00 மணிவரை |
| சுபநேரம் | 11.00-12.30 மணிவரை |

*சதுர்த்தி விரதம், சித்தாமிர்தம்*

**மேடம்**

மனச்சோர்வு, எடுத்த காரியம் தாமதமாகும், பெரியோரால் நன்மை, பிரயாணம்.

**இடபம்**

போசன சுகம், நிலை மாற்றம், முயற்சி கைகூடும், நல்ல வருமானம்.

**மிதுனம்**

உற்சாகமான நிலை, எடுத்த கருமங்கள் கைகூடும், கீர்த்தி, போசன நன்மை.

**கடகம்**

அபகீர்த்தி, புதிய திருப்பம், மந்த நிலை, தொழில் கஷ்டம்.

**சிங்கம**

ஆரோக்கியக் குறைவு, எதிர்பாராத மனஸ் தாபம், காரிய தடங்கல், தொழில் சிந்தை.

**கன்னி**

காரிய சித்தி, தொழில் விருத்தி, பொருள் சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி.

**துலாம்**

புதிய தொழில் சிந்தை, விருந்துபசாரம், முயற்சி கைகூடும், திடீர் நன்மை.

**விருச்சிகம்**

கௌரவக் குறைவு, வீண் மனஸ்தாபம், காரிய தாமதம், அதிகாரம்.

**தனுசு**

மனப் பதற்றம், புதிய திருப்பம், காரிய தாமதம், பணத் தட்டுப்பாடு.

**மகரம்**

போசன நன்மை, குதூகலம், முயற்சி கைகூடும், பொருள்சேர்க்கை.

**கும்பம்**

மாதர் நட்பு, மேன்மை, முயற்சி கைகூடும், தெய்வ சிந்தை.

**மீனம்**

நல்ல வரவேற்பு, முயற்சி பலிதம், சயன சுகக் குறைவு, புதிய சிந்தை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இரு கட்சிகள் மட்டுமே போட்டி

(அம்பாந்தோட்டை)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இரு கட்சிகள் மட்டுமே போட்டியிட வுள்ளன.

கடந்த பொதுத் தேர்தலில் மூன்று கட்சிகள் இம் மாவட்டத்தில் போட்டியிட்ட போதிலும், இம்முறை மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசிய முன்னணி ஆகிய இரண்டுமே இம்மாவட்டத்தில் போட்டியிடவிருப்பதுடன், பெருமெடுப்பில் தமது பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான ஆயத் தங்களில் ஈடுபட்டுள்ளன.

3 இலட்சத்து 74 ஆயிரத்து 361 பேரைக் கொண்ட இம் மாவட்டத்தில் 2 இலட்சத்து 25 ஆயிர்த்து 370 பேர் வாக்களிக்கும் தகுதியைக் கொண்டுள்ளனர். இவர்கள் 7 பாராளுமன்ற உறுப் பினர்களை இம்மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யமுடியும். (உ-4)

# ஐ.தே. கட்சி உறுப்பினரால் இளைஞர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் மெதிரிகிரிய பிரதே சத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை சுட்டுக் கொன்றுள்ளார்.

கடந்த வாரம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் குறித்த பிரதேச சபை உறுப்பினர் மெதிகிரியாவி லுள்ள வேதிகபுரி என்ற கிராமத்தில் கூரைத் தகடுகள வழங்கப்பட்டுக்கொண்டிருந்தபோது அதனை வழங்கவிடாது தடுத்ததாகவும், அதனைத்தொடர்ந்து அங்குள்ளவர்களுக்கும் மேற்படி பிரதேச சபை உறுப் பினர்களுக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்ற தாகவும் இறுதியில் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு பிரதேச உறுப்பினர் தலை மறைவாகிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றதுடன், குறிப்பிட்ட சந்தேக நபரான ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினரைத் தேடி வலை விரித் துள்ளதாகவும் கூறப்படுகிறது. (யே-10)

# தேசத்தைக் கட்டியெழுப்பும் முயற்சி தேர்தலின் பின்னர் ஆரம்பமாகும்

## பிரதமர் ரணில் அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்துவரும் 6 வருடங்களில் புதிய இலங்கையைக் கட்டியெழுப்புவதே தனது நோக்கம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகர மண்டப வளவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கியதேசிய கட்சியின் விசேட மாநாட்டில் உரை நிகழ்த்தும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர், எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பாராளுமனறத் தேர்தலில் பெரும் பான்மை ஆசனங்களை வென்றெடுப்பதன் மூலம் இந்தத் தேசத்தைக் கட்டியெழுப்பும் புதிய முயற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.

எமது ஐ.தே.மு. அரசு கடந்த 2 ஆண்டுகளில் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சேதத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியில் ஈடுபட்டது.

பாராளுமன்றத்தில் எமது கட்சி அதிகப்படியான ஆசனத்தைக் கைப்பற்றி ஆட்சியைப் பிடித்தபோதிலும் நிறைவேற்று அதிகாரங்கள் எமது வசம் கிடைக்கவில்லை. இருப்பினும் எம்மால் சமாதான முயற்சிகளை மேற்கொள்ள முடிந்தது.

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்கள, முஸ்லிம்களின் உரிமைகளை பாதுகாக்க உறுதி பூண்டுள்ளேன் என்றார். (உ-61,8)

# பௌசியை பின்தள்ளுகிறது பொதுஜன ஐக்கிய முன்னணி

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் அமைச்சரான ஏ.எச்.எம்.பௌசிக்கு இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இம்முறை தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை அவருக்கு அல்லது அவரது மகனுக்கு மட்டுமே வழங்க முடியும் என்று தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இருவரில் யார் போட்டியிடுவது என்று அவர்களே தீர்மானிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளது.

இந்நிலையில், இத்தகைய ஒரு பேரம்பேசலுக்குத் தாம் ஒருபோதும் உடன்படப்போவதில்லை என்று தெரிவித்துள்ள பௌசி தானோ, மகனோ இம்முறை தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று அறிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய சூழ்நிலையில், ஒரு தேர்தல் அவசியமா? என்று சில வாரங்களுக்கு முன்னர் ஐ.பி.சி. செய்தி நிறுவனம் அவரிடம் கேட்டிருந்த போது தற்போதைய சூழ்நிலையில் தேர்தல் தேவையற்ற ஒன்று என அவர் கருத்துத் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-18)

# உள்ளூராட்சி மன்ற நூலகர்களுக்கு இருவருட விசேட பயிற்சி

(பருத்தித்துறை)

நாட்டில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் நூலகர்களுக்கு நூலகசேவை சம்பந்தமான விசேட பயிற்சிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

நூலகர்களின் அறிவு ஆற்றல்கள் மேம்படுத்தப்பட வேண்டிய தன் அவசியம் இன்று ஏற்பட்டுள்ளதையடுத்தே நூலகர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வகையில், வடக்கு,கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் இயங்கும் மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகளின் நூலகர்களுக்கு இவ்விசேட பயிற்சிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடமாகாணத்தில் பணிபுரியும் நூலகர்களுக்கு யாழ். பல்கலைக் கழகத்திலும், கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் நூலகர்களுக்கு வந்தாறுமூலை பல்கலைக் கழகதிலும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ள இப்பயிற்சிகள் இரண்டு வருட காலத்திற்கு வார இறுதி நாட்களில் இடம்பெறவுள்ளன. (உ-52)

# றொனி டி மெல் மீண்டும் ஐ.தே.கவில்

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சியின் விசேட பொதுக்கூட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

றொனி டிமெல், மல்லிகா டிமெல் ஆகிய இருவருமே இக்கூட்டத்தில் கலந்துகொண்டதாகக் கூறப்படுகின்றது.

ஐக்கியதேசிய கட்சியுடன் ஒருபோதும் சேரப்போவதில்லையென கூறிவந்த இவர்கள் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கியதேசியக் கட்சியின் விசேட பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (யே-60,10)



நேற்று முன்தினம் கொழும்பு மாநகரசபை முன்றலில் நடை பெற்ற ஐ.தே.கவின் வருடாந்த மாநாட்டில் பிரதமர் ரணிலுடன் முன்னாள் அமைச்சர் றொனி டிமெல்லும் அவரது பாரியாரும் அளவளாவும் காட்சி.

# அரசியலில் இருந்து ஓரங்கட்டப்படுகிறேன்

# பொ.ஐ.மு. மீது ரத்வத்த அதிருப்தி

(கொழும்பு)

அரசியலில் இருந்து தான்



ஓரங்கட்டப்பட்டு வருவதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் அமைச்சர் அனுருத்த ரத்வத்த தனது கட்சி மீது குற்றஞ்சாட்டியுள்ளார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீர் மின்சக்தி அமைச்சர் என இரு அமைச்சுப் பதவிகளைப பொதுஜன ஐக்கிய முன் னணி ஆட்சியில் வகித்துவந்த அனுருத்த ரத்வத்த, கடந்த பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டதும் தேர்தல் தினத்தன்று உடத்தல வின்னவில் இடம்பெற்ற முஸ்லிம் இளைஞர்களின் படுகொலைச் சம்பவங்களின் சூத்திரதாரிகளில் ஒருவராக இனங்காணப்பட்டு இது தொடர்பான விசாரணைகள் இன்னமும் முடியவடையாத நிலையில் உள்ளதும் தெரிந்ததே.

இந்தநிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் நியமனங்களில் இவரது பெயர் இடம் பெறவில்லை.

தேசியப் பட்டியலில் கூட தனக்கோர் இடம் ஒதுக்கப்படவில்லை எனவும் அனுருத்த விசனம் தெரிவித்துள்ளதோடு, அரசியலில் தனது மீள்வருகை உண்டென்றும் அறிவித்துள்ளார். ஆயினும், இவரை வேட்பாளராக நியமிப்பதில் ஜனாதிபதியோ, கட்சியின் முன்னணி உறுப்பினர்களோ விரும்பம் கொண்டிருக்க வில்லை என்றுகூறப்படுகிறது.


இதேவேளை, 45 மில்லியன் ரூபா நிதி மோசடி வழக்கு விசாரணைகளுக்கும் ரத்வத்த உட்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

# ரணில் அரசின் சமாதான முயற்சிகளால் முஸ்லிம்களுக்கு எந்தப் பயனுமில்லை

## ஜனாதிபதி கண்டனக் கணை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி



அரசாங்கம் மேற்கொண்ட சமாதான முயற்சிகள் காரணமாக முஸ்லிம் மக்கள் எந்தவிதமான நன்மையையும் பெறவில்லை. அவர்களின் எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் ஐ.தே.மு. அரசினால் தீர்வுகாணப்படவில்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம்சாட்டியுள்ளார்.

தேசிய முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து கொள்வதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றபோது அதில் கலந்து கொண்ட ஜனாதிபதி இவ்விதம் குற்றம்சாட்டியுள்ளார்.

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் பலரும் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி சமாதான முயற்சிகளை முதலில் நானே ஆரம்பித்தேன். பிரதமர் ஆரம்பித்த புதிய சமாதான முன்னெடுப்பில் முஸலிமகளின் பிரச்சினைகள் எவையும் தீர்க்கப்படவில்லை. மாறாகப் பல புதிய பிரச்சினைகள் தோன்ற ஆரம்பித்தன.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஏழரைவருட ஆட்சிக்காலத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து அரசாங்கத்தினை முன்னெடுத்துச் சென்ற வேளையில் நானும் இரு தடவைகள் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டேன். விடுதலைப் புலிகளுடன் போர் நடவடிக்கைகளை மேற்கொண்ட வேளையிலும், கிழக்கு முஸ்லிம்களையும், தென்பகுதி முஸ்லிம்களையும் என்னால் பாதுகாக்க முடிந்தது.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிசெய்த காலத்தில் கிழக்கில் எந்தவொரு முஸ்லிமையும் விரட்டியடிக்க நான் அனுமதிக்க வில்லை என்று தெரிவித்துள்ளார். (உ-63,8)

# ஜனாதிபதி ஆதரவுப் பிரசாரத்தில் அவுஸ்திரேலிய ஊடகவியலாளர்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு சார்பான பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடும் பொருட்டு வெளிநாட்டவர்களும் அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வகையில், ஜனாதிபதியின் நேரடி அழைப்பின் பேரில் அவுஸ்திரேலிய சிறப்பு ஊடகவியலாளர் ஒருவர் இலங்கை வந்து சேர்ந்துள்ளார்.

இதேவேளை, இம்முறை பொதுத தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளில் ஜனாதிபதி பல்வேறு புதிய உத்திகளைக் கடைப்பிடித்து வெற்றியைத் தன்பக்கம் ஆக்கும் முயற்சிகளில் முனைப்புடன் ஈடுபட்டுவருவதாக அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ)


**யாழ்ப்பாணம் நீராவியடி அருள்மிகு ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் கோவில்**

## இசை ஆராதனை

**மேற்படி ஆலயத்தின் மண்டலாபிஷேகத்தை முன்னிட்டு 24.02.2004 செவ்வாய் முதல் தொடர்ந்து 10 நாட்கள் இசை ஆராதனை நடைபெற இருக்கிறது. மாலை 6.00 மணிமுதல் 7.00 மணி வரை நிகழும் இசை நிகழ்ச்சிகளில் பிரபல இசைக் கலைஞர்கள் பங்குபற்றுகின்றனர்.**

**விநாயகர் அடியார்களையும் இசை ஆர்வலர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**வை.இரகுநாத முதலியார்**
**பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளர்.**

(8280)


# வவுனியா அரசியல்துறைப் பொறுப்பாளர் கூட்டமைப்பு வேட்பாளர்களுடன் சந்திப்பு


(வவுனியா)

வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடும் கூட்டமைப்பு வேட்பாளர்களைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலன் சந்தித்து சமகால அரசியல் நிலைகுறித்தும் எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளார்.

வன்னித்தேர்தல் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவரைத் தவிர ஏனைய எட்டு வேட்பாளர்களும் இங்கச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

நேற்று முன்தினம் காலை 7.00 மணியளவில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. தலைமை வேட்பாளராக செல்வம் அடைக்கலநாதனும், வினோதலிங்கம், சிவசக்தி ஆனந்தன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சிவநாதன் கிஸோர், சதாசிவம் கனகரட்ணம், யோன்பெனடிக் கிறிஸ்தோப்பர் மற்றும் முஸ்லிம் உறுப்பினர் சஜானி ஆகியோருடன் மற்றும் ஒரு மன்னார் உறுப்பினரும் போட்டியிடுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (உ-18)

**எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடவுள்ள கூட்டமைப்பு வேட்பாளர்கள், நேற்று வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு முன்னர் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய போது...**



படங்கள்: பவன்,ஐங்கரன்

## பலஸ்தீனத்தில் அமெரிக்கர்களின் பாதுகாப்பை அந்த அரசே உறுதிப்படுத்த வேண்டும்

(வாஷிங்டன்)

அமெரிக்காவிடம் இருந்து மேலும் உதவிகளைப் பெறவேண்டுமானால் தமது நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் பலஸ்தீனம் தேவையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

என அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஆதரவுடன் தயாரிக்கப்பட்டுள்ள சமாதானத்திட்டத்துக்கு ஏற்ற வகையில் பலஸ்தீனம் செயற்படத் தவறிவருவது குறித்து தமது நாடு கவலையடைவதாக அமெரிக்க பொருளாதார, வர்த்தக, விவசாய அமைச்சின் செயலாளர் அனான்லாசன் ஜெருசலேமில் வைத்து தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனத்தில், அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வரும் அமெரிக்கர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பலஸ்தீனம் முன்வரவேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்குக் கரையில் பலஸ்தீனத்தின் சிரேஷ்ட அதிகாரிகளைச் சந்தித்த பின்னர் பேசுகையிலேயே இந்தவிடயங்களை அவர் கூறியுள்ளார். (து-9)

## ஹெயிட்டியின் 2 ஆவது நகரான கர்ஹெயிட்டினில் தீவிரவாதிகள் தாக்குதல்

(போர்ட் ஆபிரினஸ்)

ஹெயிட்டியின் இரண்டாவது பெரிய நகரான கர்ஹெயிட்டினில் தீவிரவாதிகள் மற்றுமொரு தாக்குதலை ஆரம்பித்துள்ளனர்.

இந்த நகரின் வீதிகளை முற்றுகையிட்ட தீவிரவாதிகள் நகரைக் கைப்பற்றும் நோக்கில் சரமாரியாகத் துப்பாக்கிப்பிரயோகத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை ஹெனாய்ஸ் நகரைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின்னர் கர்ஹெயிட்டினையும் கைப்பற்றும் நோக்கில் இந்தத் தாக்குதல் நடத்தப்படுவதாக கூறப்படுகின்றது.

தீவிரவாதிகளின் தாக்குதல் நடவடிக்கைகளை முறியடிக்கும் வகையில் போட்டோ பிறின்ஸ் ஸிற் நகரில் இருந்து மேலதிக துருப்பினரை அனுப்பிவைக்குமாறு கர்ஹெயிட்டின் தலைநகர பொலிஸ் ஆணையாளர் சாள்ஸ் ஷிலி கோரியுள்ளார். (து-9)

## ஜெயலலிதா வழங்கும் சலுகைகள் தேர்தலே உள்நோக்கம் என்கிறார் வாசன்

(மதுரை)

தமிழக முதலமைச்சர் பல்வேறு சலுகைகளை அறிவிப்பதன் மூலம் மக்களை ஏமாற்ற முயற்சிப்பதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஜீ.கே.வாசன் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தேர்தலைக் மனதில் கொண்டு இத்தகைய சலுகைகளை முதலமைச்சர் அறிவித்திருக்கிறார் என்றார். (து)

## ஈரான் தேர்தல் நியாய மற்றவையென ஐரோப்பிய ஒன்றியம் கண்டிப்பு

(நியூயோர்க்)

ஈரானில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்கள் நியாயமாக நடைபெறவில்லையென ஐரோப்பிய ஒன்றியம் கண்டித்துள்ளது.

எவ்வாறாயினும் ஈரானுடன் தடைப்பட்டுள்ள வர்த்தக நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பது அந்த நாடு அணுவாயுத்திட்டத்தைக் கைவிடுவதை உறுதி வழங்குவதிலேயே தங்கியிருப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் மேலும் தெரிவித்துள்ளது.

ஈரானில் நடைபெற்ற தேர்தல் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளி விவகார அமைச்சர்கள் நேற்றுக் கூடி ஆராய்ந்ததாக இராஜதந்திரவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாராளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினர்கள் 80 பேர்கள் உட்பட 2ஆயிரத்து500சீர் திருத்த வேட்பாளர்களை தேர்தலில் போட்டியிடுவதற்கு ஈரானின் பாதுகாவலர் பேரவை தடை செய்தமை தவறான ஒரு செயலென பல்வேறு நாடுகள் குற்றம்சாட்டி வருகின்ற நிலையில் நேற்றைய கூட்டத்தில் அது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் விரிவாக ஆராய்ந்து வருகிறது.

அதன் பின்னர் ஈரான் தேர்தல் தொடர்பான தனது நிலைப்பாட்டை ஐரோப்பிய ஒன்றியம் வெளியிடும் என இராஜ தந்திரிகள் கூறியுள்ளனர். (து-9)

## ஜம்மு — காஷ்மீர் தேர்தலைகுழப்ப பயங்கரவாதிகள் திட்டம்

### முறியடிக்கப்பட்டதாக அறிவிப்பு

(ஸ்ரீநகர்)

ஜம்மு - காஷ்மீரில் நாடாளுமன்றத் தேர்தலின் போது வன்முறையைத் தூண்டபயங்கரவாதிகள் தீட்டிய திட்டம் முறியடிக்கப்பட்டதாக எல்லைப் பாதுகாப்புப் படைச் செய்தித் தொடர்பாளர் ஸ்ரீநகரில் தெரிவித்தார்.

ஸ்ரீநகரில் ப்யங்கரவாதிகள் தங்கப் பயன்படுத்தும் மறைவிடங்களிலிருந்து 650 கிலோ வெடி மருந்துகளும் துப்பாக்கித் தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டதாக அவர் கூறினார்.

இந்த இடங்களில் வெடி மருந்துகள் இருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட சோதனையில் இவை கைப்பற்றப் பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (து)

## தமிழ்நாடு — பாண்டிச்சேரி தேர்தல் ஆய்வு செய்ய அதிகாரிகள் வருகை

வரும் மக்களவைத் தேர்தலில் தமிழ் நாடு மற்றும் பாண்டிச்சேரியில் தேர்தல் ஆரம்பப் பணிகள் குறித்து அம்மாநில அரசு அதிகாரிகளுடன் ஆய்வு செய்ய தேர்தல் ஆணையாளர் தலைமையில் இரண்டு அதிகாரிகள் சென்னை வந்துள்ளனர் எனத் தேர்தல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர்கள் நான்கு நாட்களுக்கு தமிழ்நாடு, மற்றும் பாண்டிச்சேரியில் சுற்றுப் பயணம் மேற்கொள்வர்.

இதற்கிடையே மக்களவைத் தேர்தலுக்கான அட்டவணையை தேர்தல் ஆணையம் இவ்வார மத்தியில் அறிவிக்கக் கூடும் எனத் தெரிகிறது.(து)

## என்புருக்கி நோய்க்கு புதிய மருந்து விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்

(டிரானே)

மனித உடலில் ஏற்படும் என்புருக்கி நோயைக் தடுக்கும் ஓமோன் ஒன்றை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இந்தக் கண்டு பிடிப்பானது என்புருக்கி போன்ற நோய்களுக்கான புதிய சிகிச்சை முறைகளுக்கு வழி கூறும் என அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

அல்பேனிய மருத்துவக் கல்லூரி விஞ்ஞானிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்ட இந்த ஓமோன் பற்றிய விடயங்கள் ஜீவ கணங்கள் தொடர்பான சஞ்சிகை ஒன்றில் வெளியிடப்பட்டிருக்கிறது.

என்புருக்கி நோயைத் தடுக்கும் ஓமோனிற்கு அமிலின் என பெயரிடப்பட்டுள்ளது.

எலும்புகளின் உள்ள கனிவுப் பொருட்களில் வளர்ச்சி குறைவதன் காரணமாகவே ஒஸ்லியே பேரேஷிஸ் எனப்படும் என்புருக்கி நோய் ஏற்படுகின்றது.

இதன் காரணமாக உடல் நிலை பலவீனம் அடைவதுடன் என்பு முறிவதற்கான சாத்தியங்களும் அதிகரிப்பதாக விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். (து-9)

உலக தரிசனம்

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல்
அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. - குறள்

வலம்புரி

## நீதியான தேர்தலை உறுதிப்படுத்துங்கள்

தேர்தலின் ஆரம்பமே அவ்வளவு நல்லதாக இல்லையென பெபரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிங்ஸ்லி றொட்றிக்கோ தெரிவித்துள்ளார். வேட்பு மனுக்கள் முழுமையாகத் தாக்கல் செய்து முடிப்பதற்கு முன்னதாகவே வன்முறைச் சம்பவங்கள் குறித்துத் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தேர்தலின் ஆரம்பமே வன்முறையோடு ஆரம்பித்துள்ளபோது வாக்களிப்புத் தினம் வரையான காலப் பகுதிக்குள் இடம்பெறவுள்ள வன்முறைகள், கலவரங்கள் குறித்து எவருமே ஏக்கம் கொள்ளாமல் இருந்துவிட முடியாது.

தேர்தலைக் கண்காணிப்பதற்கென சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் அழைக்கப்பட்டபோதிலும், நாடு பூராகவும் நடைபெறும் தேர்தலை கண்காணிப்பாளர்களால் ஏக காலத்தில் கண்காணித்துவிட முடியுமா? என்ற வினா தேர்தல் நியாயமான முறையில் நடைபெற வேண்டுமென விரும்புகின்றவர்களிடையே எழுந்துள்ளது.

இத்தகைய வினாவுக்கு பதில் தேடுவதற்கு அப்பால் கண்காணிப்பாளர்கள் தமது பணியை தாம் கண்காணிக்கின்ற இடங்களில் நேர்மையோடு ஆற்றுவார்களா என்பதும் ஐயத்திற்குரியதே.

ஏனெனில் சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களோடு, உள்நாட்டுக் கண்காணிப்பாளர்களும் கலந்துகொள்வதால் அங்கு ஒரு பக்கச் சார்பு ஏற்படவே செய்யும். அவ்வாறு பக்கச்சார்போடு தேர்தலைக் கண்காணிப்பது என்பது ஒரு நியாயமான தேர்தலுக்கான சூழலை ஏற்படுத்த மாட்டாது.

இத்தகைய தேர்தல் முறைகேடுகளைத் தவிர்ப்பதற்கான ஒரேவழி வாக்காளர்கள் அனைவரும் தமது வாக்குகளைச் சரியான முறையில் பயன்படுத்துவதாகும்.

தேர்தல் பற்றி அக்கறையின்றி வாக்காளர்கள் இருக்கும்போதே வாக்களிப்பில் முறைகேடுகள் நடைபெறுவதற்கான சூழ்நிலைகள் உருவாகும். எனவே, நாட்டில் அடிக்கடி தேர்தல் நடைபெறுவதைத் தவிர்த்து, அழகிய இலங்கைத் தீவில் நிரந்தரமான சமாதானத்தோடு சுபீட்சமான பாதையில் செல்வதற்கு ஏற்ற வகையில் வாக்காளர்கள் ஒவ்வொருவரும் தமது வாக்குகளைச் சரியான முறையில் பயன்படுத்த முன்வர வேண்டும்.

இவை வாக்காளர்களின் கடமை. அதேவேளை நீதியான தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் உள்ளிட்ட தேர்தல் திணைக்களமும், தேர்தல் பணிகளில் ஈடுபடுகின்ற அரச சேவையாளர்களும் அர்ப்பணிப்போடு செயலாற்ற வேண்டும். வாக்களிப்பில் மோசடிகள் இடம்பெறுகின்ற போது அதனைக் கண்டும் காணாதது போல் நடந்து கொள்வது மிகப் பெரும் அநீதியாகும். எனவே நீதியான வாக்களிப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களிலும் பணி புரிபவர்களின் தலையாய கடமையாகும்.

இதேவேளை வன்முறைகள் அற்ற ஒரு தேர்தலாக இத்தேர்தல் அமைவதற்கு அரச ஊடகங்களை நிர்வகிக்கும் அதிகாரத்தை தேர்தல் ஆணையாளர் தற்துணிபோடு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். "ஊடகங்களுக்கு ஆலோசனை கூற முடியுமே தவிர அவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் என்னிடமில்லை" எனத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அறிவித்திருந்தார்.

ஆணையாளரின் கருத்தை நிராகரித்த மனித உரிமைகள் மற்றும் சட்ட நிறுவனம் இலங்கையின் 17வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் கீழ் அரச ஊடகங்களை தேர்தல் ஆணையாளர் பொறுப்பேற்க முடியும் எனக் கூறியுள்ளது.

எனவே, தனக்கு இருக்கக் கூடியதான அதிகாரங்களை கையில் எடுத்துக்கொண்டு, அரச ஊடகங்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதன் மூலம், பக்கச் சார்பான பிரசாரங்களைத் தடுப்பதோடு, தேர்தல் வன்முறைகளையும் கட்டுப்படுத்த முடியும். இதனை நடைமுறைப்படுத்த தேர்தல் ஆணையாளர் முன்வர வேண்டும்.

### பொதுத்தேர்தல் மத்தியிலும்

# 10 வருட பௌதீக உட்கட்டமைப்பு திட்டம் நடைமுறை—பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

பொதுத்தேர்தல் பிரசாரத்துக்கிடையிலும் 10 வருட பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்தித்திட்டம் தொடர்பான ஆலோசனை, நடைமுறை மற்றும் அபிவிருத்தி நடவடிக்கை ஆகியவற்றை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும் என்பதை அமைச்சரவைப் பேச்சாளரான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உறுதிசெய்துள்ளார்.

இது தொடர்பாக பேராசிரியர் பீரிஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தத் திட்டம் தொடர்பான செயற்பாடுகளில் பிரதமரும் மற்றும் அமைச்சர்களும் கடந்த இரண்டு வருடங்களாக ஈடுபட்டு வந்துள்ளனர். இந்த ஆலோசனை ஆவணம் வெளியிடப்படவிருந்த நேரத்திலேயே பொதுத் தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும், இத் திட்டம் மக்களின் நலன் தொடர்பான அக்கறையைக் கொண்டிருந்ததால் எவ்வித தாமதமும் இன்றி முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

10 வருட பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தில் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் செழுமையை ஏற்படுத்தும் வகையிலும் ஏராளமான தொழில்களை வழங்கும் வகையிலுமான 64 அபிவிருத்தித் திட்டங்கள் அடங்குகின்றன.

வீதி அபிவிருத்தி, துறைமுக மற்றும் விமான நிலைய விஸ்தரிப்பு, மின்சாரம் மற்றும் நீர் விநியோக அபிவிருத்தி, சுற்றுலாப் பயணத்துறை விஸ்தரிப்பு, புதிய கைத்தொழில் கேந்திரங்கள் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள 75 நகர்ப்புறக் கேந்திரங்களின் அபிவிருத்தி ஆகியவை இதில் அடங்குகின்றன.


வளர்ச்சியைத் தூண்டக்கூடிய இத்திட்டம் புதுமையானதாகவும் உள்ளது. அனைத்து மக்களுக்கும் தெரியக்கூடிய வகையில் நாட்டின் எதிர்கால அபிவிருத்தியை இத்திட்டம் விளக்குகிறது. இலங்கையை மீட்டெடுக்கும் திட்டத்தின் ஒரு பகுதியான இந்த 10 வருட பௌதீக உட்கட்டமைப்புத்திட்டம் அடுத்த 10 வருடங்களில் 20 இலட்சம் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.

குறிப்பிட்ட இத்திட்டத்தைப் பற்றி ஜனாதிபதி அறிந்திருந்தார். இந்த நிலையில் இத்திட்டம் வெளியிடப்படவிருந்த நேரத்திலேயே அவர் பாராளுமன்றக் கலைப்புப் பற்றி அறிவித்தமை எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மக்களின் மேம்பாட்டின்மீது அக்கறையின்றி அவர் குறுகியகால அரசியல் இலாபத்தை முன்வைத்துள்ளார்.

எனினும், இத்திட்டம் முன்னெடுக்கப்படவேண்டும் என்று கருதுவதுடன் இது மக்களுடன் கலந்தாலோசிக்கப்படுவது மட்டுமன்றி அது முன்னெடுக்கப்படுவது தடுக்கப்படும்வரை அந்த முயற்சி தொடரவேண்டும் என்று அரசாங்கம் கருதுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார். (உ)

# மக்கள் வேறு புலிகள் வேறு அல்ல என்பதை தேர்தலில் உறுதிப்படுத்துங்கள்

**—யோசப் பரராஜசிங்கம்—**



எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் வேறு புலிகள் வேறு அல்ல என்பதை உறுதிப்படுத்துமாறு பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்தார் மட்டு. நகர் முன்னாள் எம்.பியும் தமிழர் கூட்டமைப்பின் பிரமுகர்களில் ஒருவருமான யோசப் பரராஜசிங்கம்.

வலம்புரியின் தேர்தல்களம் பகுதிக்களித்த பேட்டியிலேயே மேற்கண்ட வேண்டுகோளை அவர் விடுத்தார்.

தற்போதைய நிலையில் மக்களுக்குத் தமிழர் கூட்டமைப்பினால் ஒரு தெளிவான தீர்மானம் முன்வைக்கப்படுகின்றது. அதாவது மக்களே புலிகள், புலிகளே மக்கள் என்பதுதான் அதுவாகும். இந்தப் பிரகடனத்திற்குத் தமிழ்மக்கள் வழங்கவிருக்கும் வாக்குகளை ஒரு கருத்துக் கணிப்பாகவே உலகம் எடுத்துக்கொள்ளவிருக்கிறது. இதற்காக அனைவரும் ஒற்றுமையோடு பேதங்களை மறந்து செயலாற்றவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

தமிழர் கூட்டமைப்பில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினை தலைமைத்துவப் பிரச்சினையா என்று கேட்டதற்கு காலத்தின் தேவையை உணராத அல்லது சமயோசிதம் இல்லாத ஒரு செயற்பாட்டின் வெளிப்பாடுதான் இது. ஏனெனில் காலத்தின் தேவைகளுக்கேற்ப தமிழரசுக் கட்சியும் சரி, தமிழர் விடு தலைக் கூட்டணியும் சரி தங்கள் செயற்பாடுகளில் நெகிழ்வுத்தன்மைகளைக் கைக்கொண்டு வந்துள்ளன. இதனால் தான் அவை தொடர்ந்தும் இயங்கி வருகின்றன என்றும் குறிப்பிட்டார்.

புலிகளை நீங்கள் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்வது என்பது தமிழர் விடுதலைக் கூட்டணி எனும் உங்களது கட்சியின் இருப்புக்கான எதிர்காலம் இல்லையென்பதாகாதா? என்று கேட்டதற்கு புலிகள் சர்வாதிகாரப் போக்குடையவர்கள் இல்லைத்தானே. ஆதலால் அவ்வாறான கருத்துக்கள் அர்த்தமற்றவை. இப்போதைய காலத்தின் தேவையை உணர்ந்து செயலாற்றுவதே சிறந்தது என்று சொன்னார்.

முஸ்லிம்கள் தனி அலகு கோரியும் தம்மைத் தனித் தரப்பாக அங்கீகரிக்கக் கோரியும் மிக முனைப்புடன் போராடிவரும் இக்காலகட்டத்தில் வருகின்ற தேர்தல் முடிவுகள் அவர்களது கரங்களைப் பலப்படுத்தக் கூடியவிதமாக அமையுமா? என்று கேட்டதற்கு, தற்பொழுது அவர்கள் தங்களுக்குள்ளே மிகவும் பிளவுபட்ட நிலையிலே உள்ளனர். இந்த நிலையிலேயே அவர்கள் தேர்தல் களத்திலும் குதிக்கின்றனர். இது அவர்களை மிகவும் பலவீனமடையச் செய்யும் என்பதே என்னுடைய கருத்து என்றும் கூறினார். (யே)

## தேர்தல்களம்




### தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

கடவுள் பற்றில்லாமல் இருக்கிறார். ஏனென்றால் உலகம், உயிர்கள், அண்ட சராசரங்கள் அனைத்திடமும் அவர் அன்பு செலுத்துகிறார்.

கடவுளிடம் நம்பிக்கை வையுங்கள். திட்டம் எதுவும் தேவையில்லை. அதனால் ஆகப் போவதும் ஒன்றுமில்லை.

சுவாமி விவேகானந்தர்

# மீண்டும் ஒரு யுத்தத்திற்கு சாத்தியக்கூறுகள் இல்லை!

## காமினியின் கணிப்பு

இலங்கை பௌத்த பேரினவாதத்தின் குரல் என்று வர்ணிக்கப்படுகின்ற 'தி ஜலண்ட்' ஆங்கிலத் தினசரியில் நீண்ட நாட்களாக ஆசிரியராகப் பணிபுரியும் காமினி அவர்கள் வலம்புரியின் தேர்தல்களம் பகுதிக்கு அளித்த விசேட பேட்டியில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதற்குச் சாத்தியக் கூறுகள் இல்லை என்று கூறினார்.

இப்பொழுது நடைபெறுகின்ற தேர்தலில் ஒருவேளை ஜனாதிபதி ஜே.வி.பியுடன் அமைத்திருக்கின்ற கூட்டு முன்னணி பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைக்குமானால், மீண்டும் யுத்தம் ஏற்படுமா என்று கேட்டதற்கு, தற்போதைய உலக அரசியல் சூழ்நிலை காரணமாகப் புலிகளும் சரி ஆட்சியமைக்கக் கூடிய எந்த அரசாங்கமும் சரி யுத்தம் ஒன்றில் ஈடுபடுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்றே சொல்லவேண்டும் என்றார்.

இலங்கை மக்கள் தேர்தலை விரும்புகிறார்களா என்று கேட்டதற்கு நாட்டில் அடிக்கடி தேர்தல் இடம்பெறுகின்றது. யாரும் தேர்தலை ஆவலோடு எதிர்பார்க்கவில்லை. ஆனால், அது மக்கள் மீது திணிக்கப்படுகிறது. அதனால் மக்கள் அதனை எதிர்கொள்ளவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றனர் என்று சொன்னார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினையை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள் என்று கேட்டதற்கு, உண்மையில் அது கட்சிப் பிரச்சினையல்ல அது ஒரு தனி மனிதனின் பிரச்சினையாகும். இருந்தாலும் அவரை நான் மதிக்கிறேன். அவரது துணிவு மெச்சத்தக்கது. ஆனால், ஒரு தனிமனிதனின் வெற்றியை அந்தக் கட்சிக்குத் தமிழ் மக்கள் வழங்கிய அங்கீகாரமாகக் கருதமுடியாது. அதேவேளை, ஜனநாயக நடைமுறையில் யாரும் பங்கெடுக்கும் உரிமையுடையவர்கள் என்ற அடிப்படையில் அவர் போட்டியிடுவதில் பிழை எதுவும் இருக்க முடியாது என்றார்.

எதிர்வரும் பாராளுமன்றம் பற்றிய தங்களது எதிர்வு கூறல் என்ன? என்று கேட்டதற்கு, நிச்சயமாக இது ஒரு தொங்கு பாராளுமன்றமாகவே இருக்கும். தென்பகுதியில் இருக்கும் இருபெரும் கூட்டணியினரும் 100 ஆசனங்களையோ அல்லது அதற்குக் கூடுதலாகவோ பெறுவதென்பது உண்மையில் சாத்தியப்படாத ஒரு விடயமாகும். அந்த வகையில் மீண்டும் ஒரு குழப்பமான ஆட்சியை நோக்கியே நாடு செல்கின்றது என்றார். (யே)

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916, 0777 801038
கொழும்பு: T.P.: 2390128, Fax: 2399650, Mob: 0777 517019

## வேட்புமனு...

கிய மக்கள் சுதந்திர முன்னணி 12மாவட்டங்களிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி 5மாவட்டங்ளிலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ ஒரு மாவட்டத்திலும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

இவற்றைவிட றுஹுனு ஜனதாக் கட்சி 3 மாவட்டங்களிலும் தேசிய ஜனநாயக முன்னணி 6 மாவட்டங்களிலும்,

ஜாதிக சிஹல உறுமய 11 மாவட்டங்களிலும், சிங்கள மஹாசம்பத (பூமிபுத்தி ரக் கட்சி) 8 மாவட்டங்களிலும், லிபரல் கட்சி 4 மாவட்டங்களி லும் ஐக்கிய சோஷலிசக் கட்சி 9 மாவட்டங்களிலும்,

புதிய இடது சாரி முன்னணி 12 மாவட்டங்களிலும் இலங்கை முற்போக்கு முன்னணி 6 மாவட்டங்களிலும் ஸ்ரீ லங்கா ஜனதாக் கட்சி 5மாவட்டங்களிலும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி 2மாவட்டங்களிலும்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சி 2 மாவட்டங்களிலும், ஐக்கிய முஸ்லிம் மக்கள் முன்னணி 4 மாவட்டங்களிலும், ஐக்கிய லலித் முன்னணி 3 மாவட்டங்களிலும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஒரு மாவட்டத்திலும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. (ம)

# தேர்தல் சட்டத்தை மீறினால் பிடிவிறாந்து இல்லாமல் கைது

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை மீறும் எவரையும் பிடிவிறாந்து இல்லாமல் கைதுசெய்ய முடியுமெனத் திடீர் தேர்தல் பணிமனைத் தலைவரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான காமினி நவரத்தின தெரிவித்துள்ளார்.

இதற்கான சட்டம் கடந்த 17ந் திகதியிலிருந்து அமுலுக்கு வந்துள்ளதாக அவர் தெரிவித்தார். ஏப்ரல் மாதம் 9-ந் திகதிவரை இச்சட்டம் செல்லுபடியாகும்.

தேர்தல் பிரசாரத்திற்காக ஊர்வலம் ஒன்றை நடாத்தியமை, அல்லது அதில் பங்கு பற்றியமை, அல்லது வேறு நபர்களை அதில் கலந்துகொள்ளச் செய்தமை தொடர்பாக குற்றஞ்சாட்டப்படும் எவரையும் கைது செய்வதற்கு பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வீதிகளில் அல்லது பொது இடங்களில் கட்சிக் கொடிகளைப் பறக்க விடுதல் அல்லது விளம்பரங்களை ஒட்டுதல், தேர்தல் சட்டத்திற்கு முரணானவை எனவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

தேர்தல் சின்னங்கள், புகைப் படங்கள், பதாதைகள், சுவரொட்டிகள் என்பவற்றைப் பார்வைக்கு வைத்தல் என்பனவும் தேர்தல் சட்டத்திற்கு முரணானவையாகும்.

போட்டியிடும் கட்சியினர் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்துவதற்கு முன்னர் குறிப்பிட்ட பகுதியில் உள்ள பொலிஸ் நிலையங்களில் விண்ணப்பப் பத்திரங்களை ஒப்படைத்து அனுமதி பெறவேண்டுமென பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்தின தெரிவித்துள்ளார். (ச)

## வன்னியில்..

ஐக்கிய சோஷலிசக் கட்சி ஆகிய கட்சிகளின் முதன்மை வேட்பாளர்களே வேட்புமனுக்களை தாக்கல் செய்தவர்களாவர். இவர்களுடன் முஸ்லிம் வேட்பாளர் பெயர் கொண்ட இரு சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுவோர் விபரம் வருமாறு:

செல்வம் அடைக்கலநாதன் (முதன்மை வேட்பாளர்), அண்ணாமலை சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, ஜோன் பெனட் கிறிஸ்தோபர், முகமட் அப்துல் சஜானி, சதாசிவம் கனகரத்தினம், அகஸ்ரின் ஜோசப் மரியநாயகம், சு.நோகராதலிங்கம்.

புளொட் வேட்பாளர் விபரம் வருமாறு: தர்மலிங்கம் சித்தார்த்தன் (முதன்மை வேட்பாளர்), கனகரத்தினம் சந்திரகுலசிங்கம், அப்துல ரகுமான் முகமட், சின்னத்தம்பி கணேசலிங்கம், சரவணபவானந்தம் ஜெகநாதன், இக்னோசியஸ், சிசில் ஜோண்சன், கந்தையா சிவநேசன், துரைச்சாமி சுந்தரராஜ், வீரப்பன் திருப்பதி. (இ-13)

## பருத்தித்துறை...

திய மீனவர்கள் சுற்றி வளைத்து அவர்களைக் கத்திகள், பொல்லுகள என்பவற்றால் வெட்டியும் தாக்கியும் அட்டகாசம் செய்தனர். இரத்தினம் சிவானந்தன் என்ற மீனவரை தமது படகுக்குள் கொண்டு சென்று கத்தியால் கண்டபாட்டிற்கு வெட்டிய பின்னர் கடலில் தூக்கி வீசினர்.

இச் சம்பவத்தை அடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற ஏனைய மீனவர்களின் உதவியுடன் பிற்பகல் 5.30 மணியளவில் காயமடைந்த மீனவர்கள் கரைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

மாலை 6.30மணிக்கே மீனவர்களை அங்கிருந்து வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப் படையினர் அனுமதித்தனர்.

காயமடைந்த மீனவர்களை விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட, வடமராட்சிப் பிரதேச உறுப்பினர்கள் மீனவர் சங்கப் பிரதிநிதிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

இந்திய மீனவர்களின் காட்டுமிராண்டித்தனமான மேற்படி தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து கண்டன எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மேற்படி சம்பவத்தை வடமராட்சி மீனவர் சங்கங்களின் சமாசம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் வன்மையாகக் கண்டித்துள்ளனர். (த-43,5,3)

# ஐக்கிய சோசலிஷக் கட்சி நேற்று வேட்பு மனுதாக்கல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் பொருட்டு ஐக்கிய சோசலிஷக் கட்சி நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்தது.

நேற்றுக் காலை 9.10மணிக்கு யாழ்மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகரிடம் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் எஸ்.நகுலராஜ வேட்பு மனுவைக் கையளித்தார்.

ஏனைய வேட்பாளர்களின் பெயர் விபரம் வருமாறு;

தே.அன்ரன், ரி.சுரேந்திரகுமார், ஏ.குகதாஸ், ஏ.ஜெயராணி, என்மஹாடும், ஏ.ராஜ்குமார், கே.கோவிந்தராஜா, எஸ்.இராமநாதன், வி.கந்தையா, ஆர்.சபாரட்ணம், ஆர்.பாலசுப்பிரமணியம். (த)

## பொதுத் தேர்தல் வன்முறை இதுவரை 41 முறைப்பாடு

(கொழும்பு)

பொதுத்தேர்தல் தொடர்பான அறிவித்தல் வெளியானதில் இருந்து நேற்றுவரை தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக 41 முறைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவற்றில் 39 வரையான முறைப்பாடுகள் குற்றவியல் சட்டத்தை மீறியிருப்பது தொடர்பாகவும், ஏனைய முறைபாடுகள் தேர்தல் சட்டவிதிகளை மீறியனவாகவும் உள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணி 15 முறைப்பாடுகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 13 முறைப்பாடுகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 7 முறைப்பாடுகளையும், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) 6 முறைப்பாடுகளையும், செய்திருப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பொங்கு...

வுத் தூபிக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் செயலக வாயிலில் திரண்ட பெருந்திரளான கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் பொங்கு தமிழ் எழுச்சி பிரவாகமாக கையை மேலே உயர்த்தி பேரிகைஒலி எழுப்ப உரத்த குரலில் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி உணர்வெழுச்சியுடன் கோஷம் எழுப்பினர். (இ-51,4,19)

## யாழ்.பொது...

தரப்பினரிடமிருந்து விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய யாழ். மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கத்தின் ஏற்பாட்டில் நூலகம் திறந்து விடப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மற்றும் க.பொ.த உயர்தர மாணவர்கள் மட்டும் நூலகத்தைப் பயன்படுத்துவதற்கு முதற்கட்டமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

தினமும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 6.00 மணிவரை மாணவர்கள் நூலகத்தைப் பயன்படுத்த முடியும் எனவும் காலப் போக்கில் அனைவரும் நூலகத்தைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் ஆணையாளர் தெரிவிததார்.

1981ஆம் ஆண்டு யாழ்.பொது நூலகம் இராணுவத்தினரால் எரியூட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. (த-51)

## கூட்டமைப்பின் விசேட கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2-ந் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் பிரசார வியூகங்கள் மற்றும் பிரசார நடவடிக்கைகள் குறித்து ஆராயும் பொருட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 4 மணியளவில் இடம்பெறவுள்ள இக்கலந்துரையாடலில் பங்கு பற்றுமாறு கூட்டமைப்பின் பிரமுகர்கள், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், கட்சித் தொண்டர்கள் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி விசேட கலந்துரையாடலில் கூட்டமைப்பு வேட்பாளர்கள் அனைவரும் கலந்துகொள்ளவுள்ளனர். வேட்பாளர்களின் சிறப்பு உரைகளும் இடம்பெறும். (த-51)

## தேசியப் பட்டியல் வேட்பாளர்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் வேட்பாளர்கள் விபரம் முழுமையாக நேற்று வெளியிடப்பட்டது. அதன் விபரம் வருமாறு:

முதன்மை வேட்பாளர் மா.க. கனகேந்திரன் (கொழும்புத்துறை), க.சூரியகுமார் (கடற்றொழிலாளர் சமாசச் செயலாளர்), அ.குமாரவேல் (வெளிவாரிப் பட்டப்படிப்புகள் விரிவுரையாளர்), ரசீன் முகமெட் இமாம், த.மகாசிவம் (தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர்), நா.கணேசன் (இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சமாசம்), ப.கனகலிங்கம் (விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர்), வி.ஜி.தங்கவேல், பெரியதம்பி கனகசபாபதி, ஸ்ரீஸ்கரன் பத்மினி, வீரசிங்கம் குணசேகரம், நடராசா கனகரத்தினம் ஆகிய 12 பேர் தேசியப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். (த)

# கேள்வி அறிவித்தல்

வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு

## கட்டிடங்கள் திணைக்களம்

1. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக, கலைப்பிரிவு கட்டட கட்டம் V இல் மெல்லிய உருக்குக் கூரைவளைகள் அமைத்து உயர்த்தி இணைத்தல் மற்றும் **Chanel Ironroof Frame Work** இற்கான சீலிடப்பட்ட கேள்விகள், யாழ்ப்பாணம் கட்டிடத்திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலக கேள்விச் சபைத் தலைவரால் 2004.03.03 மு.ப. 10.00 வரை கோரப்படுகின்றன.
2. கேள்விப் பத்திரங்கள் 2004.02.27ம் திகதி பி.ப. 3.30 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமான ரூபா ஆயிரம் மட்டும் (ரூபா. 1000.00) செலுத்தி யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டிடங்கள் திணைக்கள, பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.
3. கேள்விகள் மூடப்பட்டவுடன் யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டிடங்கள் திணைக்கள, பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அலுவலகத்தில் உடன் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
4. கடந்த 5 வருடங்களில் இதே மாதிரியான வேலைகள் செய்த முன்னைய அனுபவம் உள்ளவர்களுக்கு மட்டுமே கேள்விப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி ஆவணங்களைப் பெறுமுன் இதற்கான ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.
5. பொறியிடப்பட்ட கேள்விகள் நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டிடங்கள் திணைக்களம், மே/பா. பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) கேள்விச் சபைத் தலைவருக்கு முடிவு நேரத்திற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
6. தாமதப் பிணைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என கேள்விதாரர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.
7. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம். அத்துடன் மேலதிக விபரங்கள் யாழ்ப்பாணம், கடற்கரை வீதி கட்டிடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**ஏ.டி.விக்கிரமசிங்ஹ,**
**கட்டிடங்கள் பணிப்பாளர்,**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**'செத்சிரிபாய' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,**
**பத்தரமுல்ல.**

*(C/7287)*




இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.02.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.